


MIRZA GHULAM AHMED KADIANI.

மிர்ஸா குலாம் அகமது
காதியானி.

முஸ்லிம் பாதுகாவலன்.

THE "MUSLIM GUARDIAN."

புத்தகம் 6.] புரட்டாசி, 1907. [இலக்கம் 7

Vol. 6.] SEPTEMBER, 1907. [No. 7.

# News from the Muslim World.

**Christianity and Islam.** Mr. R. A. Semple says, at the conclusion of a long article by him in the Crescent, on the "Decay of Christianity" as follows :—

From the above unbiased survey of the state of the churches and chapels in Liverpool, it will be seen that I do not take a very hopeful view of the present position of Christianity locally, or nationally either, for Liverpool is no exception to the rest of the country. But I cannot even pretend to be sorry that official "Christianity" is about played out. Official Judaism was played out when Jesus Christ came, and freed religion from the shackles with which the priests had bound it. The priests have bound Christianity in turn, and a new deliverer is needed to free it from the rites and ceremonies, the outward trappings with which it has been overlaid. I understand that you have no official hierarchy in Islam ; that the people themselves are the priests and not, as in Christianity, a sect apart. So it was in the early days of Christianity, and so it is to-day nominally. But what was once a deep truth is now a flimsy fiction ; the "Church" no longer means the whole people, as it used to do, and whether the new deliverer be a Christ or a Mohammed, a new imagebreaker is needed to spiritualise Christianity, as Mohammed spiritualised Islam. When that time comes both will be found in one. Both already believe that God is a spirit. Christianity will then go further ; it will put aside the externals of worship ; it will go to the heart of things ; it will say as Islam now says, by the entire simplicity of its devotion, without priestly aid or ritual cermonies, that God being a spirit, they that worship Him must worship Him in spirit and in truth alone.

---

**Interview with Raisuli.** The special correspondent at Tangier of the Press Association wires as follows :—

The messenger I sent to Raisuli has just returned after delivering my letter personally to Kaid Maclean's captor. He remained four days in Raisuli's camp and was then given a brief note for me written in Arabic by the taleb or scribe of Raisuli, explaining that as Mulay Taib was in the district, Raisuli had no time to reply. A letter which I sent by the same messenger to Sir Harry Maclean was taken from him by force. The messenger states that Raisuli is waiting for a letter from the Sultan to open negotiations. The Hikmass tribe state they are willing to hand over Sir Harry Maclean provided that the Sultan personally proceeds to their country to pardon them and to free them from serving in the Mahalla Imperial army, and from payment of taxes. They refuse emphatically, however, to deliver up Raisuli, but

guarantee his future good behaviour if he is pardoned, and if his house is rebuilt and his confiscated property returned.

When Kaid Maclean was first captured the Hikmass tribesmen brought him presents of fowls, eggs, and milk, and in return received money from the Kaid. Raisuli, however, informed them that this must not continue, calling them Christians and dogs to accept an unbeliever's money.

Sir Harry Maclean is well treated but is not allowed to speak to anyone but servants. Raisuli's hut is about 200 yards from Kaid Maclean's tent, and he is thus able to watch his prisoner, with whom he holds no conversation. Raisuli has informed all his tribesmen that there is no Sultan at Fez, but that Kaid Maclean is Sultan, and that all the country is given over to Christians. This diplomatic move keeps the tribes on his side, and should the Mahallas attack him he would have verymuch larger force at his disposal

Raisuli's encampment is on the flat ground, but the roads from Alcaza, Fez, or Tangier are almost impassable for horses or men. The surrounding country is full of sentries watching day and night for the appearance of the Mahalla.

My messenger was in camp when a letter was received from Mulay Taib, to whom Raisuli replied that he did not wish to enter into negotiations with anyone but the Sultan advising him at the same time to retire from the district.

When my messenger asked why he had caught the Kaid Maclean, Raisuli replied that he had advices from a European at Tangier that Kaid Maclean was not sincere, but meant to have him thrown into prison. Therefore he took him prisoner, and would detain him until his pardon had been made positively certain. The messenger states that the terms on which Raisuli demands pardon were not known in the camp.—*The Crescent.*

**Mussulmans in Crete.** We have received a letter from the Mussulmans of Crete setting forth at length the many grievances which they have against the present Government of that island. They state that since Crete was removed from Turkish control, the greatest irregularities have crept into the administration of affairs. Mussulmans are being continually insulted and ill-treated by the Christians, and deprived of all protection. Further, they allege, while the Christians enjoy every possible privilege, Mussulmansare denied the commonest rights. For instance, a deputation of Mussulmans to Prince George, the Governor of the island, were compelled to wait for several hours before they could get an interview, and when at last they were allowed to state their case,the Prince gave them a very unsatisfactory reply. No person, it is pointed out, can now receive a Government appointment in Crete unless he be a graduate of the University of Athens; consequently Greeks alone get these appointments, and no Mussulman, however highly educated he may be, and whatever diplomas he may hold, can secure even a minor Government appointment. Christians monopolise every place of honour and profit in the island, and for ten years past, although many high appointments have fallen vacant, not a single one has been given to a Mussulman, although the followers of the Prophet constitute a large proportion of the population of Crete, namely one-fifth, and therefore are entitled to at least 20 per cent of Government appointments. In Turkey, the petitioners say, certain appointments are invariably given to Christians and Jews, according to their percentage of the population, and they ask why the same rule should not obtain as regards Mussulmans in Crete. Murders and other crimes of bloodshed are stated to be of frequent occurrence, so much so that Mussulmans

living in lonely villages are beginning to emigrate in large numbers, preferring to sacrifice their landed estates and other property than continue to live under such mis-rule, by which they and all their belongings are continualy threatened.—*The Crescent.*

---

**German Influence in Turkey** The Constantinople correspondent of the "Daily Telegraph" says that German influence in Turkey is now declining. For many years Germany was supreme in the counsels of Yildiz Kiosk; the Sultan took no important step without first consulting the German Emperor, and was guided entirely by William the Second in the Cretan insurrection, the Greek war, and the Mitylene incident; but now things have suffered an eclipse, Germany no longer guides Turkey's international relations, and is ceasing to exercise the power which she once exercised to extort financial and commercial concessions for German traders in Turkey. To a great extent the success of German traders in Turkey was due to their own enterprise, energy, and business ability; but they were also helped by the numerous favours shown them by the Sultan. One of these favours took the form of a concession to a German company to construct a new bridge over the Golden Horn, in place of the present bridge between Galata and Stamboul, which the correspondent describes as being in an utterly decayed, dangerous state. The cost of the new bridge, £200,000, was to be defrayed by a loan from the German Bank. Suddenly the Turks broke off the negotiations, and let the contract to a French firm, and although the German Ambassador hastened to Yildiz Kiosk and demanded that the Sultan should keep faith with the German firm, and even used threats, he was unable to shake the resolution of Abdul Hamid, and the "Mazbata" has been signed for the work to proceed under French auspices. "Coming events," the correspondent concludes, "cast their shadows before," and in this first defiance of German authority in Turkey he sees the ultimate complete emancipation of the Sultan from the Kaiser's tutelage, and Turkey's independence of all foreign interference, unless, indeed, she returns to her former good understanding with her historic allies, France and England.—*The Crescent*

---

**The Sheikh in London.** On Thursday evening last, the 19th July, 1907 (8th Jomada-as-sani, 1325), H. E. Sheikh Abdullah Quilliam Bey, B. A., L. L. D., journeyed to London on professional business, and a number of Muslims resident in London availed themselves of the Sheikh's brief visit to the British metropolis to meet him in conference. Accordingly a meeting was arranged for Friday evening at Sinclair Road, Kensington, London, and a considerable number of True-believers were present to meet the Sheikh, who was accompanied by his second son, Billal Quilliam Bey. Amongst others present were Bro. Hafiz Mahomed Shairaini (Hon. Secretay of the London Pan-Islamic Society). Khalid Sheldrake (Hon. Secretary of the Young England Islamic Society), D. M. Seraj-uddeen, A. H. Khudadad Khan, Pro. Abdul Medzid (Cairo, Egypt), Mahomed Meshud, Ahmed Ali Khan, and many others. The Sheikh addressed the brethren for upwards of an hour, and it was decided to hold a public meeting and an "At Home" in connection with the Pan-Islamic Society in London, on Sunday the 29th September next, to which all Mussulmans resident in London and district should be invited to attend, and at each of which the Sheikh will deliver an address.—*The Crescent.*

**The Moroccan Question** I had a conversation to-day with Mustapha Kamel Pâsha, the well-known Egyptian Nationalist, who is again in Paris, touching events in the Shereefian Empire. "I consider *France is in a very* bad position, indeed," he said, with that enthusiastic volubility which is his characteristic speech. " The French speak of 'pacific penetration,' and here they are forced to take up arms to punish murderous aggression upon their citizens. That is already bad for their theory of conquering the counry by peaceful means. If a man wants to enter my house pacifically, he must first make friends with me. Because of my admiration for the French, I am extremely sorry that their present operations will make them hated by the Moors. Gone is their dream of 'la pénétration pacifique.'

"Moreover, see the difficulties of their position. To-morrow one of their nationals may be murdered at Fez or Marakesh. They must make an expedition into the interior of the *country or leave the deed unpunished*, and thus incur the contempt of the Moors. In the other case they confirm them in ther hatred and their suspicions that the conquest of the country is aimed at.

" It seems to me that in any alternative the result must be unsatisfactory. Europe apparently united will not stand by and allow France to make Morocco her colony—and, indeed, that, I am convinced, is not her policy. Supposing an international army, founded on the Cretan basis, takes up the work, the result is anarchy from the European point, just as now it is anachy amongst the Moroccans.

"The only hope I see for the country is for a strong man to arise who will unite Morocco as Mohemet Ali united Egypt. At present the Shereefian Empire is in the state of the *Russian. There are four Sultans*, and none has any authority. Let the strong man come and bring back the country to Islamic ideals, which are progress, liberty and enlightenment. The decadence of Morocco like the decadence of other Mussulman countries, is due to a departure from the true Islamism. In its place reign tyranny and ignorance.

" Mussulmans in Egypt look with pity and yet with no surprise upon the plight of Morocco. It was to be expected from conntry which has remained *crassly ignorant*. Let her ruler take counsel from the example of Japan, let him ask himself: Why are we beaten by the European? And then he will commence to set his house in order and re-establish the greatness of the Empire.

" The troubles of the country are due to the En ente Cordiale."

*Kamel Pasha* paused a moment to explain to his astonished listener. " Yes to the Entente, and to the treaty made by Delcassé. The French gave up Egypt, which they were really penetrating peacefully by means of their science and education and their capital industry; they gave it up for Morocco, which of course, induced the Moors to say: 'Our country has been sold to the French,' and to think that their territory was about to be seized.

" Should the French enter upon such an enterprise it would be a long and costly affair. The conquest of Algeria took twenty-five years: the conquest of Morocco would take fifty. They would never give in, their obstinacy is extraordinary. They are a brave, intelligent, chivalresque people, with a rich country. All they need is for *the great man to arise* and bring them out of chaos."

And Kamel Pasha went on to speak of the great Mussulman movement taking place all over the world—in Egypt, Persia, India, and China. " It was a movemet" he said, "towards that civilisation and development which characterised the Mohammedan world when Europe was sunk in barbarism."—*Egyptian Standard.*

## மிஸ்றும் முஸ்தபா காமில் பாஷாவும்.

முஸ்தபாகாமில் பாஷா "பிகாரோ" என்னும் பத்திரிகையில் கீழ் வருமாறு எழுதுகின்றார்:—

மிஸ்று தேசாபிமானிக்குத் தம் தேசத்தை இங்கிலாந்து பிடித்துக்கொண்டிருப்பதைப் பார்ப்பது வருத்தமான காரியமாயிருந்தாலும், மறுபக்கத்தில் ஐரோப்பா அல்லது உலகமுழுதும் மிஸ்றையும் அங்கெடுக்கப்பட்டிருக்கிற தத்துவமுள்ள சுதேச முயற்சியையும் கவனிக்கிறதென்றறிவது சந்தோஷமான காரியம். அம்முயற்சிக் கடைசியாய் அத்தேசத்திற்குத் தன்னிஷ்டத்தையும் சுயாதீனத்தையும் கொடுக்கும். இங்கிலீஷ் அரசாட்சியைச் சேர்ந்த பத்திரிகைகளால் ஏமாற்றப்பட்ட சில மனிதர்கள் நாங்கள் ஓர் புது அறபியின் கலகத்தைக் காண்கின்றோமோ? நாங்கள் மிஸ்றுக கலகத்தைச் சமீபித்திருக்கின்றோமோ? மிஸ்று தேசாபிமானிகளும் சாதியபிமானிகளுமாகிற வாகள் இஸ்லாத்தின் காரியகாரர்களும் கிறீஸ்தவர்களின் சத்துருக்களுமல்லவா? என்ற வினாக்களைக் கேட்கின்றார்கள். இந்தக் கேள்விகள் மிஸ்றை யறிந்தவர்களுக்குச் சிரிப்பை யுண்டாக்கினாலும் அத்தேசத்தை யறியாதவர்களைக் கலக்கலாம். இந்நியாயத்திற்காகவே நான் அவதூறுகளை—அவை எவ்வளவு பழையவையாயிருந்தாலும்—நசுக்குகிறதிலும் மிஸ்று தேசாபிமானத்தை யதுவிருக்கிறபடி மேன்மையானதென்றும் தாராளமானதென்றும் காட்டுகிறதிலும் களைக்காதிருக்கின்றேன். இங்கிலீஷ் அரசாட்சிக்கெதிராய் மிஸ்று சுதேச முயற்சி புதுக்கல்வியிலிருந்து பிறந்தவோர் பாலகனாயிருக்கின்றது. ஒரு மனிதனாலாவது தன் தேசம் அடிமையாக்கப்பட்டதை நினைக்கக் கூடாது. சுயாதீனமில்லாதவிடத்தில் மரியாதையுமில்லை. ஐரோப்பாவில் தேசாபிமானம் யாது செய்திருக்கிறதென்பதை யறிந்தபொழுது ஒரு மனிதனாவது அன்னியனுக்குமுன் தலைசாய்க்கவியலாது. தன்னிஷ்டமாயிருக்கின்ற சர்வ சாதியார்களும் தேசாபிமான வெண்ணத்தினாலேயே யவ்வாறிருக்கின்றார்கள். சரித்திரத்தை வாசித்தவர்களும் தேசாபிமான கருத்துள்ளவர்கள் அடைந்த கீர்த்தியைக் கண்டவர்களுமான படித்த மிஸ்றிகள் தங்கள் தேசத்துக்கு இந்த பரிசுத்தமான மிஸ்றுக்கு இங்கிலீஷ் அரசாட்சியை முடிவான காரியமாக மரணத்துக்குத் தண்டனையாக ஏற்றுக்கொள்வார்களென்று புத்தியுள்ளவர்கள் நினைக்கலாமா? நினைக்கக்கூடாது. ஆயிரமுறை கூடாது. அன்னியனுடைய ஆளுகை இன்றும் நாளையும் சட்டமாயிருப்பதை மிஸ்று ஒருபொழுதும் ஏற்றுக்கொள்ளாது. ஐரோப்பாவும் அமரிக்காவின் ஐக்கிய மாகாணங்களும் ஜப்பானை யெழுப்பிவிட்டன. முதல் பிரான்சும் பின்பு ஐரோப்பாவும் மிஸ்றுக்கு அதன் சரித்திரத்தையும் அது இப்பொழுது எவ்வாறிருக்கிறதென்றும் அது எவ்வாறிருக்க வேண்டுமென்றும் நினைப்பூட்டிவிட்டன. மிஸ்று தன் கடமையில் குறைந்ததாய்க் காணப்படமாட்டாது. அது எண்ணமும் செய்கையுமுள்ள மனிதர்களுக்குத் துணையாயிருக்கும். மிஸ்றிகள் தங்கள் தேசத்தை அதிகமா யுவக்கவும், அதை ஆசையோடு வணங்கவும், அதன் சுயாதீனத்துக்கும் சக்

தோஷத்துக்குமாய் ஓய்வின்றி வேலைசெய்யவும், அவர்கள் தம தேசத்தைப் பார்ப்பதும் அதன் சரித்திரத்தைத் தேடுவதும் அதன் சென்ற மகிமையை அதன் ஞாபகஸ்தம்பங்களில் வாசிப்பதும் அதன் வானத்தையும் அதன் நீல் ஆற்றையும் அதன் செழிப்பான பூமியையும் வியப்பதும போதாதா?

இந்த அதிஜயமுள்ள மிஸ்றுசாதியின் வருங்காலத்தைக் குறித்து ஆருக்காவது சந்தேகமிருக்கலாமா? பல படையேற்றங்களுக்கெதிராய் அச்சாதி காக்கப்பட்டிருக்கின்றது. மேலும் அச்சாதி பழையதாயும் இளையதாயுமிருக்கின்றது. அதனிடம் தேவைக்கதிகமான சரீரவலிமையும் வித்தியா பலமுமிருக்கின்றன. இன்னும் அதன் பக்கமாய் ஒற்றுமையும் பாஷையும் செல்வமுமிருக்கின்றன. பலமுறை தனது அரசரின் சித்தத்தால் பெரிதானதும் வெற்றி யுள்ளதுமாயிருந்த மிஸ்று திரும்பவும் தனது ஜனங்களின் சித்தத்தால் அவ்வாறாகும். அதன் மக்கள் ஐக்கியப்பட்டவர்களாயும் பலமுள்ளவர்களாயும் அதன் மீதுள்ள உவப்புக்காய் சகலத்தையும பலிகொடுத்தவர்களாயும் தங்கள் தாய்த்தேசத்தை யுயர்த்தி அபகரிக்கப்பட்ட அதன் சிலாக்கியங்களை யதற்குத் திருமபக் கொடுத்தற்குத் துணிந்திருக்கின்றார்கள். கல்வியைப் பரப்புவது கொண்டும் மேன்மையும் பெருமையுமுள்ள கருத்துகளை யெழுப்புவது கொண்டும் மனுஷசாதியிலே யுள்ளவனை மனுஷனுக்கியும் மனுஷனை தேசசுதந்தரமுள்ளவனுக்கியும் நாங்கள் மிஸ்றை அதிருக்கவேண்டிய தன்மையில் உலகத்துக்குக்கொடுப்போம். தமது கல்வியினதும் சீர்திருத்தத்தினதும் பலங்களை எங்கும் பரப்பியவர்களும் தமக்கு எல்லாச்சாதியார்களும் எதற்காவது கடமைப்பட்டவர்களா யிருக்கின்றார்களே அப்படிப்பட்டவர்கள் புதிதாய் வந்தவர்களுக்கிடையில் தங்கள் மேன்மையையும் இடத்தையும் பாதுகாத்துக் கொள்ள உரித்துள்ளவர்கள். அவ்வுரித்து பரிசுத்தமான வுரித்துக்கும் மேலானது. குறைந்த பிரயோஜனமுள்ள கிறீசும் மறுதேசங்களும் விழித்ததை யுற்சாகத்தோடு புகழ்ந்த ஐரோப்பாதேசம் மிஸ்றின் சுயாதீனத்தையும் விழிப்பையும் விரும்பும மனிதர்களின் செய்கையைப் பொறுமையோடு காணக்கூடாது. இங்கிலீஷியர்கள் ஐக்கியத்தையும் ஊக்கத்தையும் தமமில் தாமே வைத்திருக்கும் நம்பிக்கையையும் கொண்டே தாம் ஜயமடைந் திருக்கிறதாக வொப்புக்கொள்ளுகிறார்கள். அந்தக் குணங்களினாலேயே பிரிட்டிஷ் இராசியமும் அதன் செல்வங்களும் நிலைத்திருக்கின்றன. பின்னை யந்தக் குணங்கள் எங்களில் தோன்றிய பொழுது அவற்றை இங்கிலீஷியர் ஒவ்வாமையின்றிக் கண்டிக்கலாமா?

"இன்னும் நீங்கள் எதை விரும்புகிறீர்கள்? இங்கிலாந்து உங்கள் தேசத்தைச செல்வமுடையதாக்கவில்லையா? பணம் சந்தோஷமல்லவா?" என்று தேசாபிமான விரோதிகள் எங்களுக்குச் சொல்லுகின்றார்கள். எங்களுடைய கருத்து அதுவல்ல. பணம் சந்தோஷத்தை யுண்டாக்காது. அச்சொல்லை யேற்றுக்கொள்ளுகிறது ஒருசாதி யதன் செல்வத்தாலேயே கெட்டுப்போவதையும் எல்லாக்கருத்தும் அழிந்துபோவதையும்சாதியின் யோக்கிய தன்மை யற்றுப் போவதையும் விரும்புகிற

தே.மிஸ்றின் செல்வத்தை யுண்டாக்கியவைகளாயிருக்கின்ற பெலாஹை (வேளாண்மைக்காரன்) யும் நிலத்தையும், நீல் ஆற்றையும் மிஸ்றுக்கு இங்கிலாந்து கொடுக்கவில்லை. நீர்ப்பாய்ச்சும் விஷயத்தில் இங்கிலாந்து முகம்மது அலி பாஷாவினதும் பிரெஞ்சிய என்ஜினீயர்களினதும் வேலையைத் தொடர்ச்சியாய்ச் செய்துவந்ததோடு மிஸ்றை இங்கிலீஷ் இராணுவம் பிடிக்குமுன்னமே செய்யப்பட்டிருந்த பிலான்களை நிறைவேற்றி வந்தது. இந்தச் செல்வத்தை இங்கிலாந்து தானேயுண்டாக்கி யிருந்தாலும் மிஸ்றைப் பிடித்துக்கொள்ளும் உரித்து இங்கிலாந்துக்குக் கிடையாது. தன்னிஷ்டம் விலைமதிக்கக் கூடாதது என்று லோர்டு டபறின் கூறியிருக்கின்றார். தேசாபிமானிகளான நாங்கள் எங்கள் தேசத்துக்குச் செய்யவேண்டிய கடமையை யுயர்வாய் மதித்திருக்கின்றோம். இலட்சக்கணக்கான மனிதர்களுக்காக நாங்கள் எங்கள் கடமையை நிறைவேற்றுதற்கு விருப்பமற்றவர்களா யிருக்கின்றோமென்று எண்ணுவது எங்களை மெத்த நிந்திக்கிறதா யிருக்கிறது. மொன்றினீகிரியர், அபிஷீனியர் போன்ற எளிய சாதியார்கள் தன்னிஷ்ட முள்ளவர்களாயிருப்பதனால எங்களைப்பார்க்கிலும அதிஷ்டமுள்ளவர்களாய் எங்களுக்குத் தோன்றுகிறார்கள். பணம் அடிமையாயிருக்கின்றது. அதை அதிகாரியாயும் தெய்வமாயும் ஒப்புக்கொள்ளுகின்ற ஜனங்கள் விழுந்துபோனவர்களும் அழிந்துபோனவர்களுமே. நாங்கள் பாடசாலைகளை இன்னுமதிகமாய் ஸ்தாபிக்கவும் எங்கள் குடிஜனங்களை யதிகப்படுத்துவ தற்காக சுகாதார சட்டங்களை நடப்பிக்கும் பொருட்டும் எங்கள் செல்வத்தை யதிகப்படுத்துகின்றோம். பணம் ஓர் கருவியே யன்றி தாற்பரியமன்றென்று நாங்கள் சிறியோருக்கும் பெரியோருக்கும் போதிக்கின்றோம்.

ஓர் மிஸ்றி தின்ஷாவேயில் நடந்ததுபோல் தமது சகோதரர்கள் அடிக்கப்படுவதையும் தூக்கப்படுவதையும் காணும்பொழுது அவருடைய மனதில் மிகியன் கணக்கான பொருள் எவ்வித எண்ணத்தை யுண்டாக்கும்? அவருக்கு அதில் ஞாபகப்படத்தக்க வோர் பாடமிருக்கிற தல்லவா? அதிலிருந்து அவர் மேன்மையும் நீதியுமே ஜயமடைய வேண்டுமென்பதைப் படித்துக்கொள்ள வேண்டுமல்லவா? மிஸ்று தேசம் பிறிட்டிஷ் கன்ஸல் ஜனறலால் சில இங்கிலீஷ் மந்திரிகளின் துணையைக்கொண்டு ஆளப்படுகின்றது. மிஸ்று மந்திரிமார்கள் உருவங்கள் மாத்திரமே. அவர்களுக்குப்பின்னால் நின்று இங்கிலீஷியர்கள் வேலைசெய்கின்றார்கள். மிஸ்றின் நிலைபரத்தை அதிக துக்கமுள்ளதும் வேடிக்கையானதுமாகக்குகிற காரியம் சார் எட்வர்டு கிறே அவ்ஸ் ஒப் கமன்ஸில் கேட்கப்பட்ட கேள்விகளுக்குத்தாஞ்சொல்லும்பொழுது "அது எங்களுக்குடைய விஷயமல்ல, அது மிஸ்று அரசாட்சிக் குடைய விஷயம்" என்று கூறுகின்றதே. இந்த மிஸ்று அரசாட்சி யெங்கே? இந்த அரசாட்சியில் மெய்யாகவே மிஸ்றுக்குச்சேர்ந்தது என்னவிருக்கின்றது? இந்தப் பொய்யான நிலைபரம் நிலைத்திருக்கக்கூடாது. இது எங்களுக்குத் தகுமானதுமல்ல. இங்கிலாந்துக்குத் தகுமானதுமல்ல. மிஸ்றுக்கு வேண்டிய அரசாட்சி தேசாபிமான முடையதும் ஜனங்களுக்கு வுத்தர

வாதமுள்ளதுமா யிருத்தல் வேண்டும். எதிரிகள் "ஓ! உங்களுக்கு பார்லிமெந்து வேண்டுமோ" என்று வினவுகிற சத்தம் எனக்குக் கேட்கின்றது. ஏன் வேண்டாம்? 1882ம் ஆண்டு தேசவுரிமையுள்ள அரசாட்சி கொடுப்பதாக வாக்களிக்கவில்லையா? நாறு வருடம் கல்வியையும் ஆயத்தங்களையும் பெற்றுக் கொண்டபிறகு மிஸ்று பல்கேரியாவை யல்லது ஸெர்வியாவைப்போல் தேசவுரிமையுள்ள அரசாட்சியைப் பெற்றுக் கொள்ளுதற்குப் பக்குவமானதாகவில்லையா? பணவிஷயத்தில் சம்பந்தமுள்ளவர்கள் மிஸ்றின் தேசவுரிமையுள்ள அரசாட்சிக்கு விரோதிகளா யிருக்கின்றார்களென்று யான் அறிவேன். ஐரோப்பாவுக்கு மிஸ்றிலுள்ள பலன்களை யோசிக்கும்பொழுது ஐரோப்பியரின் விசுவாசத்தைப் பெற்றுக் கொள்ளுதற்கு எங்களா லேன்றியதையெல்லாம் செய்வோம். நாங்கள் ஐரோப்பாவின் கடனாளிகளாயிருக்கும் காலமெல்லாம இங்கிலாந்துமபிருன்சும் நடத்திய மேல்விசாரணையைப்போன்ற வோர் பணவிஷய பராபரிப்பை நாங்கள் ஏற்றுக்கொள்ளுவோம். நாங்கள் மிஸ்றுக்குக் கொடுக்க நாடுகின்ற பார்லிமெந்தின் நோக்கமாகிறது உள்ளூர் அரசாட்சியிலும், கல்விவிஷயத்திலும் நீதிவிஷயத்திலும், பகிரங்கவேலைகளிலும் நேராய் எங்களைச்சாருகிற சகல காரியங்களிலும் துரைத்தனத்தின் செய்கைகளைப் பராபரிப்பதே.

அன்னியர் இத்தேசத்தைப் பிடித்திருப்பதும் இங்கிலாந்து நடத்துகிற பூரணமான தத்துவமும் ஜனங்களால் சகிக்கக் கூடாத இரு இடையூறுகளா யிருக்கின்றனவென்பதை யான் பிடிவாதத்தோடு காட்டுதற்குத் தேவையின்று. மிஸ்றில் அரசாங்க இயந்திரம் நடத்தப்படுகிற தன்மை தனது மரியாதையைக் கவனிக்கிற மிஸ்றிக்கு இழிவை யுண்டாக்குகின்றதென்பதை யத்தாட்சிப்படுத்துவதில் யாதும் வருத்தமின்று. மிஸ்றில் இங்கிலாந்து ஆசிரியனின் கோலத்தில் வெளிப்பட்டிருப்பது விணாயிருக்கிறது. சித்தமற்ற மாணாககன் வளர்ந்து தனது கணக்குகளையும் உரித்துகளையும கேட்கிற தருணம் வருகிறதைத் தடுக்கக் கூடாது. நாங்கள் எங்கள் உரித்துகளையும் சுயாதீனத்தையும் ஒழுங்கான புத்தியான நீதியான போரைக் கொண்டு கேட்க வொழியோம். ஒழுங்கீனமும் கலகமும் வேறுகாரியங்களைப் பார்க்கிலும் எங்கள் தேசத்தின் மோட்சத்துக்கு அதிக இடையூறானவையே. எல்லா உரிமைகளும் மதிக்கப்படும், எங்களுடைய புத்தியில் ஐரோப்பா நம்பிக்கை வைக்கலாம. மிஸ்று சுயாதீனமாகும் நாள்வரையில் நாங்கள் ஓய்வைப் பெற்றுக்கொள்ள மாட்டோமென்றும் ஐரோப்பா நிச்சயத்துக் கொள்ளலாம். நான் பிருன்ஸையும் இங்கிலாந்தையும குழப்பி எனது நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ளப் பார்க்கின்றேன் என்று மைமஸ் பத்திரிகையின் பரிஸிலுள்ள கடிதர் அப்பத்திரிகைக்குப் புதிதாய் எழுதினார். அவர் ஓர் ஆழ்ந்த பிழை செய்திருக்கின்றார். பிருன்ஸிய இராஜாங்க விஷயத்தில் கலந்துகொள்ளுதற்கு எனக்குச் சித்தமில்லை. நாங்கள் எங்கள் பெலத்தில் மாத்திரமே நம்பிக்கைவைக்க வேண்டுமென்று அனுபோகம் அத்தாட்சிப் படுத்துகின்றது. எங்கள் தேசத்தை விடுதலையாக்கிக் கொள்ளுதற்கு நாங்கள் திராணியற்றவர்களா யிருப்போமாயின்

இங்கிலாந்தும் பிரான்சும் அடித்துக்கொள்வதைக் கொண்டு நாங்கள் முன்னே வரமாட்டோம். பிரான்சுடைய பட்சமும் துணையும் மெய்யாகவே பெறுமதியுள்ளது. அவ்விரு இராச்சியங்களுக்குமிடையில் உண்டாயிருந்த நேசமுள்ள சம்பந்தம் எங்கள் நம்பிக்கைகளைக் கெடுத்துவிட்டது. ஆகிலும் ஒரு சாதி தன்னிஷ்டத்தைப் பெற்றுக்கொள்ளுதற்கு பிரதானமான ஆவசியகமான நிலைமை அந்தச்சாதி தன்னிஷ்டத்தைப் பெற்றுக் கொள்ளுதற்குப் பக்குவமுள்ளதாயிருப்பதே. பெற்றுக்கொள்ளுகிறவனில் சித்தவலிமையும் உயிர்த்தத்துவமுமில்லாதிருக்கில் உலகத்திலுள்ள உதவியெல்லாம் உபயோகப்படாது. ஆகையால் நாங்கள் மிஸ்ரை அதன் சொந்த துணைகளைக் கொண்டே திரும்ப வுயிராக்குதற்கு முயற்சிக்கிறோம். ஆனால் பிரான்ஸே புதிய மிஸ்ருக்கு முதல் கல்வி பயிற்றிய தேசம். ஆதலால் பிரான்ஸ் நாங்கள் யாது செய்கிறோமென்பதை யறியவும் எங்களின் விழிப்பைப் புகழவும் உரித்துள்ளது. மிஸ்றில் இராஜாங்க விஷயத்தில் பிரான்ஸிய அரசாட்சி இங்கிலீஷியருக் கிடங்கொடுத்திருந்தாலும், இது இனிமேல் மிஸ்றில் பிரான்சுக்கிடமில்லையென்று அத்தாட்சிப்படுத்தாது. ஒழுக்கம் கல்வியாகிய விஷயங்களில் பிரான்ஸ் குறிக்கிடலாம். பிரான்ஸில மிஸ்ருக்கு விரோதமான கருத்துகளை யுண்டாக்குதற்கு யெவ்வளவு தந்திரங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. நாங்கள் ஜர்மானியின் துணையாளர்களென்றும் துனிஸிலும் அல்ஜியர்ஸிலும் துராலோசனை பண்ணினோமென்றும் சொல்லப்படவில்லையா? மிஸ்றிய் சுதேச கூட்டத்தாரின் நோக்கம் அவர்களின் தேசத்தை யுயர்த்துகிறதேயன்றி வேறொன்றல்லவென்பதையும் துனிஸியர்களுக்கு எம். பிச்சன் (பிரான்ஸிய மந்திரி) கொடுத்த தாங்களிதுகாறும் பெற்றுக்கொள்ளாத வுரித்துகளுக்கும் சுயாதீனங்களுக்குமாய் அவரைப் புகழ்ந்திருக்கின்றார்களென்பதையும் இன்று உலகம் அறிந்துகொள்வது சந்தோஷம.

மிஸ்ரை இங்கிலீஷியருக்கு விட்டுவிட்டு மிஸ்றிகளின் நம்பிக்கைக்கு இரண்டகம் பண்ணியதற்காய் இன்று நியாயமாய்த் துச்சிக்கின்ற பிரான்ஷியர் மிஸ்ருக்கு அதன் ஏகத்துவத்தைத் திரும்பக்கொடுப்பதற்கு எடுக்கப்படுகிற இந்த பெருமுயற்சியில் இன்று மனக்குளிர்ச்சியைப் பெற்றுக்கொள்வார்கள். இந்த முயற்சியிலிருந்து அதிக பலனுண்டாகுமென்று பிரான்ஸின் கல்விமான்கள் நம்பியிருக்கிறார்களென்றும் மிஸ்றிய தேசாபிமானிகளை நிந்திப்பது மிஸ்று பெருமையாய்ப் பாராட்டக் கூடியவர்களை நிந்திப்பதேயென்றும் மேற்படி பிரான்ஸியர் சொல்லக்கூடும். நாங்கள் தனிமையாகவும் துணையில்லாமலும் எங்களுடைய காரியத்துக்கு முழுவுலகத்தின் பட்சத்தைப் பெற்றுக்கொள்வோம். புத்தியும் பிடிவாதமுமுள்ள தேசாபிமானத்தின் தத்துவம் எல்லாத் தத்துவங்களுக்கும் மேலானது. யூகமும் தொடர்ச்சியும் ஐக்கியமுமுள்ள வோர் நீதியானபோரைக் கொண்டு மிஸ்றின் சுயாதீனத்தை ஜயிக்கப்படும். எங்கள் தேசத்தின் ஜயமாகிறது மனுஷீக தன்மையினதும் மெய்யான சீர்திருத்தத்தினதும் ஜயமாகவிருக்கும்.

## வெற்றியுள்ள உதுமானியர்.

(தொடர்ச்சி)

புதிதாய் வந்தவர்களுக்கு சுல்த்தானுேனி யோர் பெறுமதியுள்ள பொறுப்புள்ள தானமாயிருந்தது. அது கிறீஸ்தவர்களுடைய தேசத்துக்கும் முஸ்லிம்களுடைய தேசத்துக்குமிடையில் ஓர் தடையாயிருந்தது. அதிலிருந்து இஸ்லாத்தின் போர்வீரர்கள் கிழக்கு விராச்சியத்தின் பெலவீனமான கோட்டைகளுக்கெதிராய்ப் பரிசுத்த யுத்தத்தை நடத்தக் கூடியவர்களா யிருந்தார்கள். சுல்த்தானுேனியின் நயந்த விடத்திலிருந்து உதுமானியர்கள் தம்மதிகாரத்தை நீண்டகாலம் பெற்றிருக்கின்ற விராச்சியத்தைக் கீழ்ப்படுத்திக்கொள்ளக் கூடியவர்களா யிருந்தார்கள், எர்மனி, தெம்னல் என்னும் தலங்களின் பள்ளங்களிலும் அல்லது ஸகேரியா ஆற்றால் நீர்ப்பாய்ச்சப் பட்ட வெளிகளிலும் தங்கள் மந்தைகளை மேய்த்துக்கொண்டு மேற்படி அன்னியர்கள் தொகையிலும், செல்வத்திலும் பெலத்திலும் அதிகரித்தார்கள், அவர்கள் அந்த க்ஷணமே அல்லது பலயுத்தங்கள் தொடுக்காமல் அக்கிராமத்தின் சுயாதீன தலைவர்கள் மீது தங்கள் அதிகாரத்தை விஸ்தரித்துக்கொள்ள வில்லையாயினும் அவர்கள் பெயரளவில் செழிப்புள்ள நிலங்களினதும் குடிஜனங்களும் செல்வமுமுள்ள பட்டணங்களினதும் எஜமான்களாயிருந்தார்கள். நந்தவனங்களும் திராட்சத் தோட்டங்களும் ஸ்நானத் தொட்டிகளும் விடுதி வீடுகளுமுள்ள எஸ்கிஷர் பட்டணமும், எர்த்தகுறாலின் இராசதானியும் அவரடக்கம் பண்ணப்பட்டிருக்கிற தலமுமான சுகட் பட்டணமும் வேறு பலமுள்ள விடங்களும் கிராமங்களுமே முதல் உதுமானிய விராச்சியம் ஸ்தாபிக்கப்பட்ட தொட்டிலா யிருந்தன.

சுகட் பட்டணத்தில் 1258 ம் ஆண்டு எர்த்தகுறாலின் புதல்வர் உதுமான் பிறந்தனர். அவரே அந்த வழியிலுள்ள தமது சுயாதீனத்தைப் பகிரங்கப் படுத்திய அரசர். ஆதலின் அவரின் சந்ததியார் "உதுமானியர்" என்ற நாமத்தை யெடுத்துக்கொண்டார்கள். அது அவர்களின் விசேஷமான பெருமையுள்ள பட்டமாயிருந்தது. அவர்கள் புதிதாகவே துருக்கியர் என்ற பெயரை யெடுத்திருக்கின்றார்கள், யுத்தப்பிரியமுள்ள சாதியின் வீரராயிருத்தற்கு உதுமான் தகுதியுடையவராயிருந்தனர். அவரின் பிதா தமக்குச் சாட்டப்பட்ட மாகாணத்தில் தம் கூட்டத்தவர்களின் அதிகாரத்தைப் பலப்படுத்திய நீண்ட சமாதானமுள்ள காலத்தில் மகன் தாம் பிற்காலத்திலடைந்த வெற்றிக்கு ஆயத்தங்களைச் செய்தற்கு நேரத்தைப் பெற்றுக் கொண்டனர். உதுமானின் சீவியத்தில் நிகழ்ந்த முதலாவது பிரதானகாரியம் வீட்டுக்குரிய சுபாவாமானதே. அவர் பெண்ணாசையில் விழுந்தனர். எஸ்கிஷருக்குச் சமீபத்திலுள்ள இதப்றானி என்னும் கிராமத்தில் அதபலி என்றநாமத்தைப் பெற்ற நீதிசாஸ்திரத்தைக் கற்றுத்தேர்ந்த வோர் ஆலிமிருந்தனர். அவரோடு சம்பாஷணை செய்தற்கு உதுமான் மெத்த விருப்பமுடையவராயிருந்தனர். அந்த ஆலிமுக்கு வோர் அழகிய மகளிருந்தனள். அப்பெண் அவளின் விசேஷ அழகுக்காய் "மால் காத்தூன்" (பொக்கிஷ பெருமாட்டி) என்றும் "கமோயா" (சந்திரபிர

காசம்) என்றும் அழைக்கப்பட்டாள். அக்காலத்தில் உதுமானுடைய குடும்பம் அத்தேசத்துக்குப் புதிதானதாயிருந்ததோடு அதன் அதிகாரம் சுற்றியிருந்த அனற்றோலிய பிரபுக்களின் தலைவர்களால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. அக்குடும்பத்தின் அந்தஸ்தைப் பார்க்கிலும் மேலான அந்தஸ்திலுள்ள வேறு வாலிபர்கள் அப்பெண்ணை விவாகம் பண்ணுதற்குக் கேட்கலாம். ஆதலால் அப்பெண்ணின் பிதா எர்த்தகுறாலின் புதல்வரின் கேள்வியை யேற்றுக் கொள்ளவில்லை. ஆகிலும் எக்காலமும் கிழக்குத் தேசத்தாரிடம் பிரதான நியாயமாயிருக்கிற கனவைக் கொண்டு மேற்படி ஆலியின் சந்தேகங்கள் நீக்கப்பட்டன. ஓர் இரவு உதுமான் நித்திரைசெய்யும் பொழுது தாமும் மேற்படி வயோதிபரான ஆலியும் நிலத்தில் படுத்திருக்கக் கனவுகண்டார். அப்பொழுது அதபலியின் மார்பிலிருந்து வோர் சந்திரன் உதயமாகி பூரணமடைந்து உதுமானின் உருவத்தைச் சமீபித்துக் கடைசியாய் அவரின் மார்பில் இறங்கி தரித்துவிட்டது. அப்பொழுது அவருடைய இடுப்பிலிருந்து ஒரு விருக்ஷம் கிளம்பி உயரமாய் வழர்ந்து அதன் தலையையுயர்த்தி பூமிக்கும் கடல்களுக்கும் மேலே நிழலிடும் வரையில் அதன் கொப்புகளைப் பரப்பிற்று. அதன் இலைகளின் மேல்மூடியின் கீழே கோகேஸஸ் அற்லஸ், தோறஸ், ஹீமஸ் ஆகிய நாங்கு வல்லமையுள்ள மலைகள் உன்னதமாய் எழும்பின. அவை மேலேயுள்ள இலைகளின் வளைவைத்தாங்கும் நாங்குகூடாரக் கம்புகளைப் போல் தோன்றின. அவற்றின் பக்கங்களிலிருந்து இராசரீக ஆறுகளாகிய நீல், தனூபு, தைகிரிஸ் (திஜ்லா), யூபுறத்தீஸ் (புறுத்து) ஆகியவைகள் ஓடின. ஜலங்களில் சப்பல்கள் சென்றன. வயல்களில் விளைவுகளுண்டாயின. றோஸாபுஷ்பமும் சைப்பிறஸ் விருக்ஷமும் மலர்களும் கனிகளும் கண்ணுக்குப் பிரியத்தைக்கொடுத்தன. கொப்புகளில் பட்சிகள் நின்று ஆநந்தமான இராகத்தைப் பாடின. பட்டணங்கள் கோபுரங்களையும் மனுறுக்களையும் வானமளவு வுயர்த்தின. ஆலயங்களும் தண்டங்களும் கோபுரங்களும் கோட்டைகளும் அவற்றின் உயர்வான சிரசுகளைக்கிளப்பின. அவற்றின் நுனிகளில் பொன்போன்ற வளர்பிறைபிரகாசித்தது. இதை யவர் பார்த்துக்கொண்டிருக்கையில் ஓர் பெருங்காற்றுக்கிளம்பி மேற்படி வளர்பிறையை வாரி கொன்ஸ்தந்தைன் இராஜாவின் முடியிலடித்தது. அந்த விராசாவின் பட்டணம் இருகடல்களும் இரு கண்டங்களும் சந்திக்கின்றவிடத்தில் நீலக்கற்களுக்கும் பச்சைக்கற்களுக்கும் மத்தியிலுள்ள வைரத்தைப் போல் இராச்சிய மோதிரத்தின் மத்திய இரத்தினமாயிருந்தது. உதுமான் பிரகாசமுள்ள மோதிரத்தைத் தமது விரலில் போடப்போகும்பொழுது விழித்துவிட்டனர். அவர் தாம் கண்டதைமால் காத்தூனின் பிதாவுக்குத் தெரிவித்தபொழுது உதுமானினதும் சந்திரமுகமுள்ள கன்னிகையினதும் சந்ததி வருங்காலத்தில் உயர்வடையுமென்ற நிச்சயம் அவருக்குண்டுபட்டு அவ்விருவரும் ஐக்கியப்படுதற்கு அதபலி சம்மதங்கொடுத்தனர். அவர்களுக்கு உர்கான் என்ற ஓர் மகன் 1288ம் ஆண்டு பிறந்தனர். மேலும் அதேவருடத்தில் உதுமானின் பிதா எர்த்தகு

## வெற்றியுள்ள உதுமானியர்.

(தொடர்ச்சி)

புதிதாய் வந்தவர்களுக்கு சுல்த்தானேனி யோர் பெருமதியுள்ள பொறுப்புள்ள தானமாயிருந்தது. அது கிறீஸ்தவர்களுடைய தேசத்துக்கும் முஸ்லிம்களுடைய தேசத்துக்குமிடையில் ஓர் தடையாயிருந்தது. அதிலிருந்து இஸ்லாத்தின் போர்வீரர்கள் கிழக்கு விராச்சியத்தின் பெலவீனமான கோட்டைகளுக்கெதிராய்ப் பரிசுத்த யுத்தத்தை நடத்தக் கூடியவர்களாயிருந்தார்கள். சுல்த்தானேனியின் நயந்த விடத்திலிருந்து உதுமானியர்கள் தம்மதிகாரத்தை நீண்டகாலம் பெற்றிருக்கின்ற விராச்சியத்தைக் கீழ்ப்படுத்திக்கொள்ளக் கூடியவர்களாயிருந்தார்கள். எர்மனி, தெம்னஸ் என்னும் தலங்களின் பள்ளங்களிலும் அல்லது ஸகேரியா ஆற்றால் நீர்ப்பாய்ச்சப் பட்ட வெளிகளிலும் தங்கள் மந்தைகளை மேய்த்துக் கொண்டு மேற்படி அன்னியர்கள் தொகையிலும், செல்வத்திலும் பெலத்திலும் அதிகரித்தார்கள். அவர்கள் அந்த க்ஷணமே அல்லது பலயுத்தங்கள் கொடுக்காமல் அக்கிராமத்தின் சுயாதீன தலைவர்கள் மீது தங்கள் அதிகாரத்தை விஸ்தாபித்துக்கொள்ள வில்லையாயினும் அவர்கள் பெயராளவில் செழிப்புள்ள நிலங்களினதும் குடிஜனங்களும் செல்வமுமுள்ள பட்டணங்களினதும் எஜமான்களாயிருந்தார்கள். நந்தவனங்களும் திராட்சத் தோட்டங்களும் ஸ்நானத் தொட்டிகளும் விடுதி வீடுகளுமுள்ள எஸ்கிஷர் பட்டணமும், எர்த்தகுறாலின் இராசதானியும் அவாடக்கம் பண்ணைப்பட்டிருக்கிற தலமுமான சுகட் பட்டணமும் வேறு பலமுள்ள விடங்களும் கிராமங்களுமே முதல் உதுமானிய விராச்சியம் ஸ்தாபிக்கப்பட்ட தொட்டிலாயிருந்தன.

சுகட் பட்டணத்தில் 1258 ம் ஆண்டு எர்த்தகுறாலின் புதல்வர் உதுமான் பிறந்தனர். அவரே அந்த வழியிலுள்ள தமது சுயாதீனத்தைப் பகிரங்கப் படுத்திய அரசர். ஆதலின் அவரின் சந்ததியார் "உதுமானியர்" என்ற நாமத்தை யெடுத்துக்கொண்டார்கள். அது அவர்களின் விசேஷமான பெருமையுள்ள பட்டமாயிருந்தது. அவர்கள் புதிதாகவே துருக்கியர் என்ற பெயரை யெடுத்திருக்கின்றார்கள். யுத்தப்பிரியமுள்ள சாதியின் வீரராயிருத்தற்கு உதுமான் தகுதியுடையவராயிருந்தனர். அவரின் பிதா தமக்குச் சாட்டப்பட்ட மாகாணத்தில் தம் கூட்டத்தவர்களின் அதிகாரத்தைப் பலப்படுத்திய நீண்ட சமாதானமுள்ள காலத்தில் மகன் தாம் பிற்காலத்திலடைந்த வெற்றிக்கு ஆயத்தங்களைச் செய்தற்கு நேரத்தைப் பெற்றுக் கொண்டனர். உதுமானின் சீவியத்தில் நிகழ்ந்த முதலாவது பிரதானகாரியம் வீட்டுக்குரிய சுபாவமானதே. அவர் பெண்ணாசையில் விழுந்தனர். எஸ்கிஷருக்குச் சமீபத்திலுள்ள இதப்றானி என்னும் கிராமத்தில் அதபலி என்றநாமத்தைப் பெற்ற நீதிசாஸ்திரத்தைக் கற்றுத்தேர்ந்த வோர் ஆலிமிருந்தனர். அவரோடு சம்பாஷணை செய்தற்கு உதுமான் மெத்த விருப்பமுடையவராயிருந்தனர். அந்த ஆலிமுக்கு வோர் அழகிய மகளிருந்தனள். அப்பெண் அவளின் விசேஷ அழகுக்காய் "மால் காத்தூன்" (பொக்கிஷ பெருமாட்டி) என்றும் "கமோயா" (சந்திரபிர

காசம்) என்றும் அழைக்கப்பட்டாள். அக்காலத்தில் உதுமானுடைய குடும்பம் அத்தேசத்துக்குப் புதிதானதாயிருந்ததோடு அதன் அதிகாரம் சுற்றியிருந்த அனற்றோலிய பிரபுக்களின் தலைவர்களால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. அக்குடும்பத்தின் அந்தஸ்தைப் பார்க்கிலும் மேலான அந்தஸ்திலுள்ள வேறு வாலிபர்கள் அப்பெண்ணை விவாகம் பண்ணுதற்குக் கேட்கலாம். ஆதலால் அப்பெண்ணின் பிதா எர்த்தகுறாலின் புதல்வரின் கேள்வியை யேற்றுக் கொள்ளவில்லை. ஆகிலும் எக்காலமும் கிழக்குத் தேசத்தாரிடம் பிரதான நியாயமாயிருக்கிற கனவைக் கொண்டு மேற்படி ஆலிமின் சந்தேகங்கள் நீக்கப்பட்டன. ஓர் இரவு உதுமான் நித்திரைசெய்யும் பொழுது தாமும் மேற்படி வயோதிபரான ஆலிமும் நிலத்தில் படுத்திருக்கக் கனவு கண்டார். அப்பொழுது அதபலியின் மார்பிலிருந்து ஓர் சந்திரன் உதயமாகி பூரணமடைந்து உதுமானின் உருவத்தைச் சமீபித்துக் கடைசியாய் அவரின் மாாபில் இறங்கி தரித்துவிட்டது. அப்பொழுது அவருடைய இடுப்பிலிருந்து ஒரு விருக்ஷம் கிளம்பி உயரமாய் வழர்ந்து அதன் தலையையுயர்த்தி பூமிக்கும் கடல்சளுக்கும் மேலே நிழலிடும் வரையில் அதன் கொப்புகளைப் பரப்பிற்று. அதன் இலைகளின் மேல்மூடியின் கீழே கோகேஸஸ் அற்லஸ், தோறஸ், ஹீமஸ் ஆகிய நாங்கு வல்லமையுள்ள மலைகள் உன்னதமாய் எழும்பின. அவை மேலேயுள்ள இலைகளின் வளைவைத்தாங்கும் நாங்குகூடாரக் கம்புகளைப் போல் தோன்றின. அவற்றின் பக்கங்களிலிருந்து இராசரீக ஆறுகளாகிய நீல், தனூபு, தைகிரிஸ் (திஜ்லா), யூபுறத்தீஸ் (புறுத்து) ஆகியவைகள் ஓடின. ஜலங்களில் சப்பல்கள் சென்றன. வயல்களில் விளைவுகளுண்டாயின. றோஸாபுஷ்பமும் ஸைப்பிறல் விருக்ஷமும் மலர்களும் கனிகளும் கண்ணுக்குப் பிரியத்தைக்கொடுத்தன. கொப்புகளில் பட்சிகள் நின்று ஆநந்தமான இராகத்தைப் பாடின. பட்டணங்கள் கோபுரங்களையும் மனுருக்களையும் வானமளவு வுயர்த்தின. ஆலயங்களும் தண்டங்களும் கோபுரங்களும் கோட்டைகளும் அவற்றின் உயர்வான சிரசுகளைக்கிளப்பின. அவற்றின் நுனிகளில் பொன்போன்ற வளர்பிறைபிரகாசித்தது. இதை யவர் பார்த்துக்கொண்டிருக்கையில் ஓர் பெருங்காற்றுக்கிளம்பி மேற்படி வளர்பிறையை வாரி கொன்ஸ்தந்தைன் இராஜாவின் முடியிலடித்தது. அந்த விராசாவின் பட்டணம் இருகடல்களும் இரு கண்டங்களும் சந்திக்கின்றவிடத்தில் நீலக்கற்களுக்கும் பச்சைக்கற்களுக்கும் மத்தியிலுள்ள வைரத்தைப் போல் இராச்சிய மோதிரத்தின் மத்திய இரத்தினமாயிருந்தது. உதுமான் பிரகாசமுள்ள மோதிரத்தைத் தமது விரலில் போடப்போகும்பொழுது விழித்துவிட்டனர். அவர் தாம் கண்டதை மால்காத்தூனின் பிதாவுக்குத் தெரிவித்தபொழுது உதுமானினதும் சந்திரமுகமுள்ள கன்னிகையினதும் சந்ததி வருங்காலத்தில் உயர்வடையுமென்ற நிச்சயம் அவருக்குண்டுபட்டு அவ்விருவரும் ஐக்கியப்படுதற்கு அதபலி சம்மதங்கொடுத்தனர். அவர்களுக்கு உர்கான் என்ற ஓர் மகன் 1288ம் ஆண்டு பிறந்தனர். மேலும் அதே வருடத்தில் உதுமானின் பிதா எர்த்தகு

றால் மரணமடைந்தனர். அதன் பிறகு உதுமான் தமது கூட்டத்தின் தலைவராயும் எஸ்கிஷர் பட்டணத்தின் அதிகாரியாயுமாகி விட்டனர். அப்பட்டணத்தோடு கருஜாஹிஸார் (மலன்கியா) என்ற தலம் 1289ம் ஆண்டு ஸல்ஜூக்கு சுல்த்தானல் சேர்க்கப்பட்டது. உதுமான் முதலாவது காரியமாகவோர் பள்ளிவாசலை எஸ்கிஷரில் கட்டி நீதிச்சட்டத்தையும் இஸ்லாத்தின் கொள்கைகளையும் நடத்துதற்குத் தேவையான உத்தியோகத்தர்களையேற்படுத்தினர். உறுதியுள்ள பட்சபாதமற்ற நீதி அவரின் இராச்சிய முறையின் முன்னணியிலிருந்ததால் அதுவே அவரின் அதிகாரம் பரக்குதற்கு அதிகந்துணையா யிருந்தது. ஆகிலும் இந்த சமாதானமுள்ள தொழில்கள் கொஞ்சங்காலத்தில் யுத்தத்தின் மருட்களுக்காய் அப்புறப் படுத்தப்பட்டன. ஒரு காலத்தில் உதுமானிய கோத்



சுல்த்தான் உதுமான் கான்.

(1வது உதுமானிய அரசர்.)

திரத்தவர்கள் தங்கள் மந்தைகளை மலைப்பக்கத்தில் மேய்ப்பதிலும், தங்களுக்கு வேண்டிய தேனைச் சேர்த்துக்கொள்வதிலும் தங்களின் இரத்தின கம்பளங்களை நெய்ந்துகொள்வதிலும் இடையர்களின் சொற்ப உபயார்த்தமற்ற ஜீவியத்தை யுடையவர்களா யிருப்பதிலும் திருப்தியுடையவர்களாயிருந்தார்கள். ஆகிலும் அவர்கள் சீக்கிரம் இந்த பழகியவழிகளை விட்டுவிட்டு புதிய துணிவுள்ள மேடுகளுக்குச் சென்றார்கள். அம்மாகாணத்திலிருந்த தலைவர்களை யொருவருக்குப்பின் ஒருவராய்க் கீழ்ப்படுத்திக் கொண்டார்கள். அவர்களின் தத்துவம் யனீஷர் பட்டணத்துக்குச் செல்லும் வரையில் கிரீக்கின் இராச்சியத்தின் வெளிக் கோட்டைகளை யொன்றின்பின் னென்றாய்ப் பிடித்துக் கொண்டார்கள். அப்பொழுது அவர்களின் முன்னே ஆ

சியாவிலிருந்த கிறீககரின் இரு பிரதான பட்டணஙகளான புறாஸாவும் நிஸேயியும தோன்றின. யனீஷர் என்ற பிரதான தலத்தைப் பிடித்துக்கொண்டதற்குத் தந்திரத்தைத் தந்திரம் மிகைத்ததே காரணம். உதுமானின் எதிரிகள் அவரைப்பிடித்து அவரின் அதிகாரத்தை முடித்துவிடுதற்குத் துராலோசனை பண்ணி 1299ம் ஆண்டு பிலேஜிக்கு என்ற தலத்தில் நடந்த வோர் கலியாணத்தைத் தாங்கள் சந்திக்கும் தருணமாய் நியமித்துக் கொண்டார்கள். இத்துராலோசனை யறியப்பட்டபொழுது நாற்பது உதுமானிய கோத்திரப் பெணகள் ஒரு சாட்டோடு விவாகத்துக்கு ஆயத்தங்கள் பண்ணப்பட்ட மாளிகைக்குட் பிரவேசித்தார்கள். அங்கு இராணுவத்தவர்களும் விருந்தாளர்களும கலியாணக் கொண்டாட்டத்தில் ஆழ்ந்திருக்கையில் நாற்பது பெண்களும் தங்கள் வேஷங்களை யகற்றிவிட்டு நாற்பது உதுமானிய போர்வீரர்களாய்த தோன்றி சீக்கிரத்தில் அக்கோட்டையையும் மணவாளியையும பிடித்துக் கொணடார்கள். நஹுாயர் என்ற நாமத்தைப் பெற்ற அந்த அழகிய வாலிப கிறீக்குப்பெண் பிற்காலத்தில் சுல்த்தான் முறுதின் (1வது) தாயாயிருந்தனர். அந்தத் தந்திரம் அறியபபடமுன் உதுமான் மின்னைப்போல் யர்ஹிஸா நககுச் சென்று அதைப் பிடித்துக்கொண்டனர். அவருடைய ஜனங்களில ஒரு கூட்டத்தார ஐனிகோல பட்டணததைப் பிடித்துக்கொண்டனர். இவ்வாறே அவா உதுமானியரின தேசத்தை எர்மனி தொடரிலிருந்து ஒலிம்பஸ் மலைவரையில் பருபபிததனர், அவர் யனீஷரில் தம இராசதானியை ஸதாபித்து அதை புறாஸாவுக்கும கடைசியில இஸ்தம்பூலுக்கும் போகுதற்கு வோர் படிக்கல்லாய் உபயோகித்தனர். அதைச் சேர்த்தபிறகு உதுமானிய தேசம் றுாமின் பதினேழு வுட் பிரிவுகளிலொன்றாயிருந்தது. றுாமோ பிற்காலத்தில் சிறப்புப்பெற்ற சுல்த்தான் சுலைமானின் இராச்சியம் பிரிக்கப்பட்டிருந்த இருபத்தைந்து மாகாணஙகளிலொன்று மாத்திரமே.

இப்பொழுது உதுமானிய துறக்கியர் சுலததானேனியில் முதல் குடியேறி ஐம்பது வருடஙகளுக்கு மேல் சென்றது. இன்னும் அவர்களுடைய எல்லைகள் ஒடுக்கமானவைகளா யிருந்தன. முன்னேற்றத்தின் அலை அலைவற்றதானவுடன் கதியாய்ச்சென்றது. ஒரு குளத்தின் மத்தியில் ஓர் கல்லை யெறிந்தவுட னுண்டாகிற் சுற்றுகிற அலையைப்போல் துறுக்கியின் அதிகாரம் நித்தியமாய்ப் பெருக்கின்ற வட்டங்களைப்போல் பரந்தது. பதின்மூன்றும் நாறுண்டினீற்றில் ஸல்ஜூக்கு கோததிரம் நிர்மூலமாககப் பட்டபொழுது உதுமானிய துறுக்கியரின் தேர்ச்சி தூண்டிவிடப்பட்டது. பத்துவெவ்வேறான தேசஙகள் (அவற்றிலொன்றே சுல்த்தானேனி) ஸல்ஜூக்குகளின் அதிகாரத்தைப்பெற்றுககொண்டு அவர்களின் இராச்சியததைத் தம்முள் பிரித்துக்கொண்டன. இதுமுதல் துறுக்கியரின் பேராசைகளைத் தடுக்க வோர் சிரேஷ்ட அரசர் இருக்கவில்லை. எதிரிகளே யிருந்தார்கள், முதல் தங்களை யுபசாரத்தோடு தம தேசத்துக் கழைத்த அரசருக்குத் துரோகமின்றி வேறபடி எதிரிகளைத் தாக்கிக் கீழ்ப்படுத்தத் துருக்கியர் கூடியவர்களா யிருந்தார்கள், கடைசி

யாக அந்த வெவ்வேறான தேசங்கள் உதுமானின் குடும்பத்தவர்களின் இராசசியத்தில் விழுங்கப்பட்டன. ஆகிலும் இது அவ்விராச்சியத்தை யுண்டாக்கியவர் மரணித்து பல வருடங்கள் சென்ற பிறகே சம்பவித்தது. அக்கப்பத்துத் தேசங்களுள் கமானின் இளவரசரே அதிக பலமுள்ளவராயிருந்தனர். அவருடைய நிலங்கள் துருக்கிய தேசங்களோடு சேர்க்கப்படுமுன் அவரோடு பல யுத்தங்கள் நடத்தப்பட்டன. ஆகிலும் நாம் இப்பொழுது குறிக்கிற காலத்தில் கமானிய தேசத்திற்கெதிராய்ச் செலுத்தற்கு உதுமானியர் வலிமையில்லாதவர்களாயிருந்தார்கள். ஆதலால் அவர்களின் தேசம் பதினாலாம் நூற்றாண்டின் துவக்கத்தில ஐரோப்பா பக்கமாய் நீண்டது. அங்கிருந்த வொருகாலத்தில் வல்லமையுள்ளவர்களா யிருந்த கிழக்குத் தேச சக்கிரவர்த்திகளின் பலவீனமான பிரதிநிதிகள் சுல்த்தானேனியிலிருந்து சென்ற பலத்த வீரர்களுக்கு இலேசான இரையாகிவிட்டார்கள். உதுமான் யனீஷரிலிருந்த தமது கோட்டையிலிருந்து படையெழுச்சிகளைச் சமீபத்திலிருந்த கிரீக்கு பட்டணங்களுக்கெதிராய் அனுப்பி கிரீக்கு சக்கிரவர்த்தியின் சேனைகள் தமக்கு விரோதமாய் வருமுன் பல கோட்டைகளைப் பிடித்துக் கொண்டனர். கடைசியாக அவா பபேரயியம் என்ற விடத்தில் ரூமிகளின் சேனையைச் சந்தித்த பொழுது அதை முற்றாய்த் தோல்வியாக்கிவிட்டு பிதனியாவையும் கொள்ளையெடுத்தனர். ஆதலால கிரீக்கர் பயந்து நிசேயி பட்டணத்திலிருந்து வெளியே வரவில்லை. இந்த வெற்றிகளால் உதுமான் தைரியங்கொண்டு தமது இராணுவங்களைக் கடல்வரையில செலுத்தி ஐதின், ஸாருகான் ஆகிய இளவரசர்கள் செய்த[illegible]ழும செய்தனர். அவ்வ[illegible]களின் கப்பற் சேனைகள் கிரீக்குத்தீவுகளைச் சூறையாடின. உதுமான் படிப்படியாய் கிரீக்கு இராசசியத்தின் இரண்டாம பட்டணமான நிசேயியை வளைந்தனர். மேலும் அவர் மெல்ல தமது சேனைகளை புறுஸாவுக்கெதிராகக் கொண்டுவந்து அப்பட்டணத்துக்கு நேரே இரு கோட்டைகளைக் கட்டி அவற்றிலிருந்து கொண்டு அப்பட்டணத்தை முற்றிகையிட்டனர். பெரிய குடிஜனங்களுள்ள நன்றாய் அரணிக்கப்பட்ட தனவான்களான ஆகிலும யுத்தப்பிரியமற்ற கிரீக்கர் வசித்த மேற்படி பட்டணங்களைப் பிடித்தற்கு உதுமானியர் உபயோகித்த வொழுங்கு கிறீஸின் பூர்வகாலத்தில் டோரியர் உபயோகித்த வொழுங்குக்கு வித்தியாசமானதா யிருக்கவில்லை. மெய்யாகவே அந்த வொழுங்கைக் கொண்டே ஓர் சிறு சேனையின் தைரியமும் விடாமுயற்சியும் கல்வியையும் தொகைகளையும் ஜயிக்கலாம். தாங்கள் தாககுகின்ற பட்டணத்தை யொழுங்கான தன்மையில் வழியடைத்துக் குடிஜனங்கள் தங்களை விடுதலையாக்கிக் கொள்ளுதற்கு என்றமட்டு முயற்சிக்கத் தாண்டிவிடாது உதுமானிய துருக்கியர் பட்டணங்களுக்குச் சமீபத்தில் பலத்தகாவலாகளை நிறுத்தி விளைவு நிலங்களைச் சூறையாடி, ஆடுமாடுகளையும அடிமைகளையும கொண்டுபோய் குடிஜனங்கள் வர்த்தகஞ் செய்யும் வழிகளைத் தடுத்துவிட்டனர். தேசம பாழாக்கப்பட்டதும வெளியாரின் பத்திரக்குறைவும தீன்சாமான்களின் விலையை யுயர்த்தி வி

ட்டதோடு ஜனங்கள் புறதேசம் போய்க் குடியேறவும், பஞ்சமுண்டாகவும் செய்துவிட்டன. இவ்வாறே கிறீக்கு ஆலயத்தின் கோட்டையிலும் இரண்டு யுகங்களாய்க் கிறீக்கு விராஜதானியுமாயிருந்த நிசேயிப்பட்டணம் நெருக்கமாய் வழியடைக்கப்பட்டது. அதே காலத்தில் உதுமானின் விரைந்து செல்லும் குதிரைப்பட்டாளம் பொஸ்பறஸ் வரையிலும் கறுப்புக்கடல் வரையிலும் தேசத்தைக் கொள்ளையெடுத்தது. பொஸ்பறஸுக்கப்பால் எரிக்கப்பட்ட கிராமங்களின் அக்கினிக் கொழுந்துகளை ஸ்தம்பூலிலிருந்த தமது மாளிகையின் கோபுரத்திலிருந்து கிறீக்கு சக்கிரவர்த்தி பார்க்கக் கூடியவராயிருந்தனர். துருக்கிய அரசரின் கப்பல்கள் கடலோரங்களைக் கொள்ளையிட்டன. அவரின் சோர்வில்லாத வியாபகமான தாக்கின் கீழ் தேசமுழுதும் நடுங்கிக்கொண்டிருந்தது. அவர் தமது வொழுங்குகளை நன்றாய் நிறைவேற்றினர். புறூஸா பட்டணத்தை பத்துவருடம் வளைந்துகொண்டிருந்த பின்பு பலனையடைந்தனர். அந்தப் பெரும்பட்டணம் 1326ம் ஆண்டு அவருக்கொப்புக் கொடுக்கப் பட்டது. அதன் மதில்களில் உதுமானிய கொடியை உறுகான் நாட்டிவிட்டு அந்நற்சமாசாரத்தைத் தமது பிதாவுக்குத் தெரிவிப்பதற்காக சுகட் பட்டணத்துக்கு விரைந்து சென்றனர். அந்த வெற்றியை யறிந்துகொள்வதற்கு உதுமான் சீவித்திருந்தனர். அதன் பின்னர் அவர் திருப்தியுள்ளவராய் எழுபது வயதில் இருபத்தைந்து வருடம் ஆளுகை செய்துவிட்டு மவுத்தானார்கள். வளர்ந்துவருகிற தமது தேசத்தின் புது விராஜதானியான புறூஸாவில் தம்மை அடக்கஞ்செய்யும்படி அவர் கேட்டுக்கொண்டனர். அங்கு அவர் மரியாதையோடு கொண்டுபோகப்பட்டார். இந்த நூற்றாண்டு வரையில் அங்கு அவருடைய கபர் இருந்தது. அவருடைய வாள் இதுகாறும் ஸ்தம்பூலில் காப்பாற்றப்பட்டிருக்கிறது. அவரின் சந்ததியில் ஒருவருக்குப் பின் னொருவராய் வரும் சுல்த்தான்களுக்குக் கிரீடதாரணம் நடத்தப்படும் தருணத்தில் அந்த வாளே கட்டப்படுகின்றது.

துருக்கியர் உதுமானே தாங்களின் முதலாவது சுல்த்தான் என்று ஏற்றிருப்பதற்கு நியாயமிருக்கின்றது. உதுமானிய துருக்கிய கூட்டத்தாரை ஆசியாமைனரில் ஸ்தாபித்தவர் எர்த்குறூலே. ஆகிலும் அவர் தன்னிஷ்டமுடையவாவது தமது மகிமையையோர் இளவரசரின் மகிமைக்கதிகமாய் உயர்த்தவாவதில்லை. உதுமானே இராச்சிய கனவு கண்டவர். அவர் அக்கனவை முற்றாய் உண்மைப் படுத்த வில்லையாயினும் பெருமையுள்ள இஸ்தம்பூல் பட்டணத்தைத் தமது காலண்டையில் காணவில்லையாயினும் அவர் ஹலஸ்பொன்று கடலோரம் வரையில் வெற்றியடைந்து, புறூஸா பட்டணத்தின் சிங்காசனத்தின் மீது தமது மகனையிருத்தி நிசேயி நிகோமேடிய ஆகிய பட்டணங்களைப் பிடிப்பதற்கும் பொஸ்பறஸ் கரைகளில் துருக்கிய அதிகாரத்தை ஸ்தாபிப்பதற்கும் வழியை யாயத்தப்படுத்தி வைத்தனர். அவர் துவங்கிய வெற்றியை அவரின் சந்ததியார்கள் பூரணப்படுத்தினார்கள். கிறீக்கர்களுக்கும் ரோமான்களுக்கும் சாதியாருக்கும் ஸல்ஜூக்குக்குப் பின் தோன்றிய துருக்கிய அமீர்களுக்கும் எதிராய் உதுமான் யுத்தஞ் செய்தவா

றே அவரின் மகனும் பேரப்பிள்
ளையும் செய்துவந்தார்கள். உது
மான் மரணித்து நீண்டகாலஞ்
சென்றபிறகும் அவரின் அதிகார
ச் செல்வாக்கு உணரப்பட்டது.
உதுமான் தமமட்டில் முந்தி
ன அறபு கலீபாக்களைப் போல்
இயல்பானவராயும் தமது விருப்
பங்களிலும் வழக்கங்களிலும் பூ
ர்வீக மனிதர்களை யொத்தவராயு
மிருந்தனர். அவர் வெள்ளியையு
ம் பொன்னையும் வைத்துவிட்டு ம
வுத்தாக வில்லை. ஓர் உப்புக் கோ
ப்பையும் ஓர் அகப்பையும் பின்ன
ல்வேலைசெய்யப்பட்டவோர் சட்
டையும், வெள்ளைத் தலைப்பாகை
யும், கொடிகளும், குதிரைகளும்,
ஓர் இணைமாடுகளும, கொஞ்சம
ஆடுகளுமே அவர் இறந்தபின் அ
வரின் ஆஸ்திகளா யிருந்தன. அ
ந்த ஆடுகளின் சந்ததிகள் புறா
ஸா புற்றரைகளில் இன்னும் மே
ய்கின்றனவாம். அவர் இயல்பா
ன உடைதரித்தவரா யிருந்தாலு
ம் அவரின் உருவம் ஏய்க்கிறதா
யிருந்தது. லொன்கிமான்ஸைப்
போல் அவரின் கரங்கள் முழங்
காலுக்குப் பணிந்திருந்தன. அவ
ரின் தொடைகள் ஓர் குதிரை வீர
னுடையன. அவரின் தோற்றமா
ன மூக்கும் கறுப்பான தலைமயி
ரும் தாடியும் செங்கல்மங்கலான
நிறமும் அவருக்கு கறுத்த "உ
துமான்" என்ற பெயரைக் கொ
டுத்தன. கறுப்பு நிறம் கிழக்கு
த்தேசத்தில் சங்கையானதும் கு
ண வலிமையையும் சரீர பல
த்தையும் ஊக்கத்தையும் காட்ட
க் கூடியதுமே. கறுத்த உதுமா
னின் வீர இலக்ஷணங்கள் அ
நேக யுகங்களாய் அவரின் ச
ந்ததியார்களில் தோன்றின. கு
றைந்தது முன்னூறு வருடக்கா
லத்தில் தைரியத்தால் விசேஷம
டையாத வொரு சுல்த்தானுவது

டதுமானிய சிங்காசனத்தில் இ
ருக்கவில்லை, ஆண்மை துருக்கி
யரின் சுதந்தரமே.

(இன்னும் வரும்)

---

صحيح بخاري

## ஸஹீஹ் புகாரி.

—:0:—

கனம். முகிய்யத்தீன் சாகிபு அ
கமது லெவ்வை ஆலிம்சாகி
பு அவர்களால் முஸ்லிம் பா
துகாவலனுக்காய் விசே
ஷமாய் மொழிபெய
ர்க்கப்பட்டது.

(தொடர்ச்சி)

ஈமானைப்பற்றியது.

மகா கருணையும் தயாளமு மு
டைய அல்லாவின் திருநாமங்
கொண்டு.

ஈமானுகிறது சொல்லும் செ
லும, அதாவது நாவைக்கொ
ண்டு சொல்லுதல், கல்பை
க்கொண்டு உண்மை கொள்ளு
தல், மார்க்க அமல்களைக் கல
ப்பற செய்யுதல், பறுளுகளை இ
றுத்துவருதல், ஆகியவைகளே
யாம். இனி, அது அமல்களுக்
குத் தககபடி பெருகிவருவதும்,
குன்றுவதுமுண்டு. அதற்கு அத்
தாட்சியாக, அவர்களது ஈமானு
டன் இன்னும ஈமான் அதிகப்ப
டுவதுக்கா யென்றும், நேர்வழி
பெற்றவர்கட்கு ஈமானை அதிகப்
படுத்தி அவர்கட்கு "தக்வா"
வையுக் கொடுப்பானென்னும், ஈ
மான் கொண்டவர்கட்கு ஈமான்
அதிகப்படும என்றும், இன்னும்
உங்களுள் யாருக்கு இது ஈமானை
யதிகப்படுத்தியதென்றும், அவ

ர்கட்கு ஈமானையும் ஈடேற்றத்தையுமே அல்லாது அதிகப்படுத்தவில்லை யென்றும் அல்லாஹுத்த ஆலா திருவுளம்பற்றி இருக்கின்றான்.

ஈமானுக்குப் பல கற்பனைகளும், பாதைகளும், எல்லைகளும், ஸுன்னத்துகளும், உண்டாயிருக்கின்றன. ஆகவே அவற்றைப் பூரணமாய்க் கொண்டவன் ஈமானைப் பூரணமாய்க்கொள்வான். அவற்றைப் பூரணமாய்க் கையாடாதவன் ஈமானையும் பூரணமாய்க் கொண்டிருக்க மாட்டான். நான் உயிரோடிருப்பின் அவற்றை நீங்கள் அறிந்துகொள்ளும் பொருட்டு வருங்காலத்தில் தெளிவாய் உங்கட்கு விவரிப்பேன், நானிறந்து போவேனாயின் உங்களுடைய தோழமையில் நான் ஆசையுள்ளவனல்ல என்று உமறிபுனு அப்துல் அஸீஸ் அவர்கள் அத்திபுனு அத்தி அவர்கட்கு கடித மூலமா யெழுதி தெரிவித்தார்கள்.

இபுறாகீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தன்னுடைய நாயனிடங் கேட்டார்கள் மிகுதியான ஈமானைப் பெற்றுக் கொள்வதிலே எனது கல்பு தரிபடுவதுக்காகவென்று (அதாவது, இபுறாகீம் அலைஹிஸ்ஸலாம் அல்லாஹுத்த ஆலாவிடம் இறந்துபோனவர்களை எவ்விதம் உயிர்ப்பிப்பாயென்று என்னுடைய நாயனே எனக்குக் காண்பித்துத் தரவேணுமென்றார். அதற்கு, நீர் அங்ஙனம் ஈமான் கொண்டிருக்க வில்லையா? வென்று அல்லாஹுத்த ஆலா அவரைப்பார்த்துக் கேட்டான். அதற்கு அங்ஙனமே நான் ஈமான் கொண்டிருப்பது நிசம். ஆயினும் நான் கேட்பது மிகுதியான ஈமானைப் பெற்றுக்கொள்வதிலே என்னுடைய "கல்பு" தரிபடுகிறதுக்காகவென்று சொன்னார். அப்போது அல்லாஹுத்த ஆலா அதை யுமக்குக் கண்ணால் காண மனமிருந்தால் நான்கு பறவைகளைப் பிடித்து அவற்றைத் துண்டு துண்டாயரிந்து, உம்மிடங்குவித்து அவற்றின் அவயவங்களை மலைதோறுமாக்கி, பின்பு அவைகளை வாருங்களென்றழையும், உம்மிடம் அவைகள் விரைவில் வருமென்று சொன்னான். இபுறாஹீம் அலைஹிஸ்ஸலாம், மயில், காகம், கழுகு, சேவல், ஆகிய இந்நான்கு பறவைகளையும் பிடித்தறுத்து இறகுகளனைத்தையும் பிடுங்கி அவற்றின் அவயவங்களைத் துண்டு துண்டாயரிந்து எல்லாவற்றையும் ஒன்றோடொன்றாய்க்கலந்து அப்பறவைகளின் தலைகளை மாத்திரம் தங்கள் கையில் பிடித்துக்கொண்டு மற்றயவைகளை யெல்லாம் ஏழுமலை, அல்லது நாலுமலையில் வைத்துவிட்டு வந்து, அல்லாவின் உத்தரவுப்படி வாருங்களென்றழைத்தார். அப்போதையில், இபுறாகீம் நபி அவர்கள் வியப்புக் கொள்ளத் தக்கவிதமாய் ஒவ்வொரு இறகு, ஒவ்வொரு எலும்பு, ஒவ்வொரு சதைத்துண்டு இவைகள் யாவும் அதனுடைய மற்றய துண்டுகளில் ஒட்டி ஆகாய மார்க்கமாய் தலையில்லாப் பட்சிகளாய்ப் பறந்து விரைவாய் வந்து அவர்கள் கையில் வைத்திருக்கும தலையைக்காட்ட அந்தத் தலையை யுரியது அதில் ஒட்டிக் கொள்ளவும், அங்ஙனமே நாலு தலைகளை ஒட்டிக்கொண்டு பறவைகளாய்ப் பறந்துபோயின).

இபுனு உமறு சொன்னார்கள் ஒரு அடிமை தன்னுடைய கல்பில் ஊசாடும் பல கருமங்களையெல்லாம் விட்டகலும் வரையும் தக்

வாவின் உள்ளமையைப் பெற்றுக்கொள்ள மாட்டான் என்று.

நபி சல்லல்லாஹு அலைகிவ சல்லம் திருவுளமானதாக இபுனு உமறு அறிவித்தார் இஸ்லாமாக்கம் ஐந்து கருமங்களில் எடுக்கப்பட்டிருக்கின்றது, அவையாவன: வணங்கப்படத்தக்க நாயன் அல்லாவைத் தவிர இல்லை என்றும், முகம்மதாகிறவர்கள் அல்லாவின் திருத்தூதரென்றும் சாட்சி பகருதல், தரிபாடாய்த் தொழுதல், ஸக்காத்துக் கொடுத்தல், ஹஜ்ஜு செய்யுதல், றமளான் மாசம் நோன்பு வைத்தல், ஆகியவைகளேயாம். அல்லாஹுத்தஆலா திருவுளமாயிருக்கிறுன் ஈமானுகிறது கிழக்கு மேற்கு ஆகியாம் திசைகளில் உங்கள் முகங்களைத் திருப்புகின்றதல்ல. ஆயினும் மூமினுகிறவன் அல்லாவைக் கொண்டும், வேதங்களைக் கொண்டும் மலக்குகளைக்கொண்டும் கடைசி நாளைக்கொண்டும் நபிமார்களைக் கொண்டும் ஈமான் கொண்டு காசுபணங்களை யுவப்புடனே சுற்றத்தவர்கள் அனுதாகள் ஏழைகள் பிரயாணிகள் கேட்டுளருபவர்கள் அடிமைகள் ஆகியவர்கட்கு ஈந்தும் தொழுகையைத்தரிபாடாய்த்தொழுதும் வருபவனே. இன்னும் அவர்கள் உறுதிமானஞ்செய்வார்களாயின் அவ்வுறுதிமானத்தை நிறைவேற்றுவார்கள். இன்னும் அவர்கள் தரித்திரத்திலும் வருத்தத்திலும் போர்புரியும் நேரத்திலும் பொறுதிசெய்வார்கள், அவர்களே ஈமான் கொண்டவர்கள். அவர்களே தக்வா உடையவர்கள். நிச்சயமாய் மூமீன்கள் ஈடேற்றம் பெற்றூர்கள். அவர்களாகிறவர்கள் பயங்கராத்துடன் தொழுவார்கள். வீணுன கருமங்களை விட்டும் அகன்று கொள்வார்கள்; ஸக்காத்தை யிறுப்பார்கள் என்று.

நபி சல்லல்லாஹு அலைஹிவ சல்லம் அவர்கள் திருவுளமானதாக அபூஹுறைறு றளியல்லாஹு அன்ஹுவைத் தொட்டும் வரப்பட்டிருக்கின்றது. ஈமானுகிறது அறுபதே சொச்சப் பகுதிகள். வெட்கமும் அவற்றுள் ஒன்றே. நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் திருவுளமானதாக அப்துல்லா இபுனு அமறு அறிவித்தார் முஸ்லிமாகிறவர்கள் யாரெனில் அவனுடைய நாவை விட்டும் கையை விட்டும் முஸ்லிம்கள் ஸலாமத்துப் பெற்ற ஒருவனேயாம். முஹாஜிருகிறவன் அல்லாஹுத்தஆலா விலக்கியவைகளை வெறுத்து நடப்பவனேயாம். அபூமூசா சொன்ஞர்கள் ஒருபோது அஸ்ஹாபிமார்கள் நபிசல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் அல்லாவுடைய றசூலே இஸ்லாமில் மிக ஏற்றமானவன் யாரென்று கேட்க மிகவுமே ஏற்றமானவன் அவனுடைய நாவை விட்டும் முஸ்லிமகள் ஸலாமத்துப்பெற்ற ஒருவனே என்று நபிநாயகம் பகர்ந்தார்கள்.

அப்துல்லா இபுனு அமறு சொன்ஞர் நபி ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களிடம் ஒரு மனிதன் வந்து "இஸ்லாமில்" மிக்க ஏற்றமான குணம் யாது என்று வினவ பசியாளிக்கு நீர் ஆகாரம் கொடுப்பதும் நீர் அறிந்த அறியாதவர்கட்கு சலாம் சொல்வதுமென்று நாயகம் பகர்ந்தார்கள். நபி சல்லல்லாகு அலைஹி வசல்லம் அவர்கள் திருவுளமானதாக அனஸ் றளியல்லாஹு அன்குவைத் தொட்டும் வந்திருக்கின்றது உங்களுள் ஒ

ருவன் தனக்கு உவப்பானதை தன்னுடைய சகோதரனுக்கும் உவந்துகொள்ளும் வரையில் அவனுடைய ஈமான் பூரணமாகாது. அபூகுறைறு றளியல்லாகு அன்கு அவர்களைத்தொட்டும் வந்திருக்கின்றது றசூல் சல்லல்லாகு அலைஹிவ சல்லம் அவர்கள் சொன்னார்கள், என்னுடைய "நபுசு" அவனுடைய கையைக் கொண்டு தரிப்பட்டிருக்கும் நாயனின் பேரில் சத்தியமாக உங்களுன் ஒருவன் அவனது பெற்றுன்ரப்பார்க்கிலும், பிள்ளையைப் பார்க்கிலும் என்னையவன் மிக உவப்பாய்க் காணும்வரையும் ஈமான் கொள்ளமாட்டான், நபி சல்லல்லாகு அலைஹிவசல்லம் திருவுளமானதாக அனஸ் றளியல்லாகு அன்ஹூவைத் தொட்டும வந்திருக்கின்றது. மூன்று கருமங்கள் எவனொருவனி லுண்டாயிருப்பின் அவன் ஈமானின் இன்பத்தைப் பெற்றுக்கொள்வான், அவையாவன: அல்லாவும், றசூலும், மற்றய எல்லாவற்றைப் பார்க்கிலும மிக உவப்பாயிருக்குதல், அல்லாவுக்காக வேண்டியே அல்லாது ஒரு மனிதனை நேசிக்காதிருக்குதல, நெருப்பிலே அவன் தள்ளப்படுவதை எவ்வாறு பொருந்தக்கெட்டிருப்பானே அவ்வாறே "குபுரிலே" மீளுகின்றதை பொருந்தக் கெட்டிருப்பது ஆகியவைகளேயாம்.

உப்பாத்திபு ஹுஸ்ஸாமித் றளியல்லாகு அன்கு அவர்கள் பதுறுச் சண்டைக்குப் போயிருந்தவர்களும் தலைமைக்காரருள் ஒருவராயு மிருந்தனர், அவர்கள் சொல்லுகிறார்கள் நபிநாயகமவர்கட்குக் கடைசியில் பைஅத்துச் செய்துகொடுத்த லைலத்துல் அக்கப வென்னு மிரவில் நபிநாயகமவர்களை அஸ்ஆபிமார்களுள் ஒரு கூட்டம் சூழ விருக்கும்போது அவர்கள் சொன்னார்கள், அல்லாவுக்கு நீங்கள் இணையாக்காதிருக்கவும், களவு, வியபிசாரம், ஆதியாம்வைகளை நீங்கள் செய்யாதிருக்கவும், உங்களது மக்களை நீங்கள் கொலைசெய்யா திருக்கவும், உங்கட் கிடையும், உங்களடிமைகட் கிடையும் பொய் பகரா திருக்கவும், நன்மையான கருமங்கட்கு நீங்கள் மாற்றம் செய்யா திருக்கவும் எனக்கு பைஅத்துச் செய்யுங்கள். இந்த வார்த்தைப்பாட்டை ஒருவன் நிறைவேற்றுவானாயின் அவனுக்குக் கூலி அல்லாவிடமே. இவற்றுள் ஒன்றைச் செய்வானாயின் முதலாவதாய் இம்மையிலேயே அவன் தண்டிக்கப்படுவான். அதுவே அவனுக்குத் தண்டமானது. அதைச் செய்தபின்பு அல்லாகுத்த ஆலா அக்குற்றத்தை விட்டு மவனை மறைத்துவிடுவானாயின் அது கருமம் அல்லாவிடமே. அவனின் சித்தப்பிரகாரம் ஒருவேளை மன்னித்துக்கொள்வான் அல்லது ஆக்கினைசெய்வான் என்றார்கள். இதன்படியே அவர்கட்கு நாங்கள் பைஅத்துச் செய்துகொடுத்தோம்.

நபி சல்லல்லாகு அலைகிவ சல்லம திருவுளமானதாக அனஸ் றளியல்லாகு அன்கு சொல்லக் கேட்டேன் என்று இபுனு அப்துல்லா இபுனு ஜபுறு அறிவித்தார் அன்ஸாரிகளை உவப்பது ஈமானின் அடையாளத்தி லுள்ளது, அவர்களை வெறுப்பது நிபாக்கின் அடையாளத்தி லுள்ளது என்று.

(இன்னும் வரும்,)

## மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி.

——:0:——

## இவர் மகுதிதானா அல்லது மாய்மாலியா?

இந்தியாவில் லாஹோருக்குச் சமீபத்திலுள்ள காதியான் என்னும் பட்டணத்தில் மிர்ஸா குலாம் அகுமது என்ற நாமத்தைப் பெற்ற வொருவர் சென்ற 1891 ம் ஆண்டு முதல் தாமே றசூல் சல்லல்லாகு அலைகிவ சல்லம் அவர்களால் குறிக்கப்பட்ட மகுதியும் மஸீகும் என்று கூறுகின்றார். அவருடைய சொல்லை யநேகர் விசுவாசித்து அவரைத் தொடர்ந்திருக்கின்றார்கள். அநேகர் அவரைப் பொய்யனென்று கண்டிக்கிறார்கள். அவருண்மையான மகுதியும் மஸீகுமென்று நாலு லட்சம் பெயர்கள் விசுவசிக்கின்றார்களென்று சொல்லப்படுகிறது. அவரைத் தொடர்ந்தவர்கள் அகுமதிய்யாக்களென்று அழைக்கப்படுகிறார்கள். அவரின் முயற்சிக்குத் துணையாய் உறதுப்பாஷையில் அல்ஹிக்கம் "அல்பதர்" என்ற இரு பத்திரிகைகளும் இங்கிலீஷ் பாஷையில் "ரிவியூ ஆப் ரிலிஜன்ஸ்" என்ற பத்திரிகையும் ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றன. எம்து பத்திரிகையை வாசிப்பவர்கள் அறியும் பொருட்டு மேற்படி மிர்ஸா குலாம் அகுமது அவர்களின் சீவிய சரித்திரத்தையும் அவரின் கொள்கையையும் குறித்து மேற்படி இங்கிலீஷ் பத்திரிகையில் தரப்பட்டிருப்பதை மொழி பெயர்த்து இங்கு தருகின்றோம். அவருடைய முகப்படம் இச்சஞ்சிகையின் முறப்பக்கத்தில் தரப்பட்டிருக்கின்றது.

அகுமதிய்யா கொள்கையை யுண்டாக்கியவரான மிர்ஸா குலாம் அகுமது 1839 ம் ஆண்டு காதியானில் பிறந்தனர். அவரின் பிதாவின் பெயர் மிர்ஸா குலாம் முர்தஸா. அவர் முகுல் வமிசத்தைச் சேர்ந்த பர்லாஸ் கோத்திரத்தின் சந்ததியிலுள்ளவர். அவரின் முற்பிதாக்கள் பெர்ஷியமாகாணமாகிய குருஸான் தேசத்தில் குருமார்களா யிருந்தவர்கள். ஹிஜ்றத்து பத்தாம் நூற்றாண்டில் பாபர் இந்தியாவில் அரசாண்டபொழுது குலாம் அகுமதின் முற்பிதாக்களுள் ஒருவரான மிர்ஸா ஹாஜிபேக்கு என்பவர் பெர்ஷியாவிலிருந்து குடியெழும்பி இந்தியாவுக்குத் தம் குடும்பத்தோடும் இருநூறு ஆட்களோடும் வந்து லாஹோருக்கு வடகிழக்கே எழுபது மைலுக்கப்பால் குடியேறினர். அவரங்கு வோர் கிராமத்தை யமைத்து அதற்கு இஸ்லாம்பூர் என்ற நாமத்தைக் கொடுத்தனர். அவருக்கு அத்தேச அரசரால் ஓர் நிலம் இனாமாய்க் கொடுக்கப்பட்டது. அது மாஜ்ஜா என்று அழைக்கப்பட்டது. அவருக்கு காஸியின் அதிகாரமும் அரசரால் கொடுக்கப்பட்டதால் அதுமுதல் இஸ்லாம்பூர் என்ற தலம் இஸ்லாம்பூர் காஸிமாஜ்ஜி என்றும் சுருக்கமாய் காஸியென்றும் அறியப்பட்டு கடைசியாய் காதியான் என்று அழைக்கப்படுகிறது.

முகுல் இராச்சியம் அழிந்துபோனகாலத்தில் குலாம் அகுமதின் முன்னோர்களுக்குக் கொடுக்கப்பட்ட ஜாகிர் தன்னிஷ்டமான தேசமாகிவிட்டது. அக்காலத்தில் குலாம் அகுமதின் பெரிய பாட்டனாரான மிர்ஸா குல் முகம்மது என்பவரே அக்குடும்பத்தின் தலையாயிருந்தனர். அவர்

வசம் 85 கிராமங்களிருந்தன. அ
வர் மரணித்தபிறகு அவரின் மக
ன் மிர்ஸா அத்தா முகம்மது த
லைவராயினர். அக்காலத்தில் அ
வரை ஸிக்கு சாதியார் மேற்
கொண்டு காதியானைத்தவிர மற்
றைய கிராமங்களை யொன்றின்
பின்னொன்றாய்ப் பிடித்துக்கொ
ண்டார்கள். காதியான் அரணிக்
கப்பட்டிருந்தாலும் அதற்கெதி
ராயும் ஸிக்கு சாதியார் சென்று
அதையும் பிடித்துக்கொண்டு அ
ங்கிருந்த வீடுகளையும் பள்ளிவா
சல்களையும் பாழாக்கிவிட்டு புத்
தகசாலையை யக்கினிக்கிரையா
க்கிவிட்டு மிர்ஸா அத்தா முகம்
மதையும்அவரின் குடும்பத்தவர்
களையும் காதியானிலிருந்து அக
த்திவிட்டார்கள். ஆகிலும் மே
ற்படி அத்தா முகம்மதின் மகன்
மிர்ஸா குலாம் முர்த்தஸா ஸிக்கு
அரசர் றன்ஜித் ஸிங்கு இடம் த
மது முற்பிதாக்களின் ஜாகிரிலி
ருந்து ஐந்து கிராமங்களைப்பெற்
றுத் திரும்பவும் காதியானில் கு
டியேறினர்.

மிர்ஸா குலாம் அகுமது சிறு
பிராயத்தில் வீட்டில் கல்வி கற்ற
னர். அவர் குறுஆனையும் சில
பாரிஸ் கித்தாபுகளையும் பஸ்லி இ
லாகி என்பவரிடம் படித்தனர்.
அறபு இலக்கணத்தை பஸல் அகு
மது இடம் கற்றனர். பிற்காலத்
தில் குல் அலிசாஹ் என்பவர் கு
லாம் அகுமதின் அறபு பாத்தி
யாயிருந்தனர். மேலும் அவர்
அக்காலத்தில் கீர்த்திபெற்ற வை
த்தியராயிருந்த தமது பிதாவிட
ம் வைத்தியம் படித்தனர். சிறு
பிராயமுதல் குலாம் அகுமது ப
டிக்கிறவராயும் தமது புத்தகங்க
ளோடு தனித்திருக்க விரும்பிய
வராயுமிருந்தனர். அவர் உலக
விஷயங்களை விட்டும் நீங்கி இரு
த்தற்கு விருப்பமுள்ளவரா யிரு
ந்தனர். ஆகிலும் அவரவ்வா றி
ருப்பதை யவரின் பிதா வுவந்து
கொள்ளாது அவரை உலக விஷ
யங்களைக் கவனிக்கும்படிக்கும் த
ங்களுடைய இழக்கப்பட்ட ஜாகி
ர்களை யெடுத்தற்குத் தமக்குதவி
யா யிருக்கும்படிக்கும் கேட்டும்
அவர் குடும்பத்தின் மேன்மை
யைத் திரும்ப இஸ்தாபிக்கவாவ
து உலக தொழிற்களைக் கவனிக்
கவாவதில்லை. ஆகிலும் இடை
க்கிடை குலாம் அகுமது தமது
பிதாவின் கேள்விப்படி நடந்துவ
ந்தனர். தமது பிதாவின் கேள்வி
ப்படி அவர் ஸேல்கட் என்ற தல
த்தில் அரசாட்சியாரின் வேலையி
லமைந்து அதில் சில வருடங்க
ளைக் கழித்தனர். அவர் தொழில்
செய்யும் பொழுதும் மனிதர்க
ளோடு அதிகமாய்க் கலக்காது
பகல் வேலைமுடிந்த பிறகு வீட்டு
க்குச்சென்று தமது புத்தகங்க
ளை வாசித்துக் கொண்டிருந்தனர்.
வேதத்தை யதிகமாய்க் கவனிப்
பவர்கள் மாத்திரமே அவரோடு
நேசமாயிருந்தார்கள். அவர் வே
தவிஷயங்களை விளக்கப்படுத்து
வதில் மிக்கத் தத்துவமுள்ளவர்.
இஸ்லாமார்க்கத்துக் காதரவான
வர். அவர் வேதத்தைக்குறித்து
சம்பாஷிக்கும்பொழுது கிறீஸ்
துமத போதகர்கள் தாமும் அ
வரின் வார்த்தைகளைக் கவனமா
ய்க்கேட்க விருப்புற் றிருந்தார்க
ள். அவரின் பிதாவான மிர்ஸா கு
லாம் முர்தஸா 1876ம் ஆண்டு
ஜூன் மாதம் மவுத்தானர். த
மது தகப்பனின் மரணத்தைக்
குறித்து மிர்ஸா குலாம் அகும
து கீழ்வருமாறு சொல்லியிருக்
கின்றார்;—

“எனது தகப்பனின் மரணகா
லம் சமீபித்துவிட்டதென்று எ
னக்கு தரிசனத்தில் தெரிவிக்கப்
பட்டது. அந்தத் தரிசனம் எனக்

குண்டுபட்டபொழுது யான் லாஹோரிலிருந்தேன். நான் தீவிரமாய் காதியானுக்குப்போய் அவர் அதிகம் நோயாளியா யிருப்பதைக் கண்டேன். ஆகிலும் அந்நோய் கொஞ்சந் தணிந்ததால் அவர் சீக்கிரம் மரணமடைவாரென்று யான் எண்ணவில்லை. அந்த நாள் நாங்களெல்லோரும் அவரின் படுக்கையைச் சுற்றியிருக்கையில் அவர் என்னை உஷ்ணமதிகமா யிருந்ததால் கொஞ்சம் படுக்கும்படி கேட்டனர். நான் படுப்பதற்காய்ச் சாய்ந்தபொழுது எனக்கு வோர் அறிவிப்பு கிடைத்தது. அதாவது "வானத்தைக்கொண்டும சூரியன் அஸ்தமித்த பின்னர் உண்டாகும் இடையூறைக் கொண்டும்" என்றதே. அந்த அறிவிப்பு சர்வ வல்லமையுள்ள அல்லாகுத்த ஆலா விடத்தில் நின்றும் வந்திருக்கிறதென்றும் அதில் சூரியனஸ்தமித்தபிறகு உண்டாகுமென்று காட்டப்பட்ட இடையூறு எனது தகப்பனின் மரணமேயன்றி வேறொன்றல்லவென்றும் நான் அறிந்துகொண்டேன். இந்த அறிவிப்பை யான் பெற்றுக்கொண்டவுடன் பிதாவின் மரணத்தின் பின் எங்கள் குடும்பத்தின் வருமானங்கள் நின்றுவிடுமே யென்று யான் மனுஷீக பலவீனத்தால் எண்ணினேன். அவ்வாறெண்ணியவுடன் "அல்லாகுத்த ஆலா அவனின் அடிமைக்குப் போதியவனல்லவா" என்று எனக்கு அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பு எனது மனதுக்கு அதிஜயமுள்ள வுபசாரணையையும் திருப்தியையும் கொண்டு வந்ததோடு என் மனதுக்குள் ஓர் இரும்பாணியைப்போல் சென்றது. இந்த அறிவிப்பிலுள்ள சந்தோஷமான செய்தி அதிசயமான தன்மையில் நிறைவேற்றப் பட்டதற்கு சாட்சியாயிருக்கும்படி யான் எனது றப்பை கேட்கின்றேன். அன்று சூரியன் அஸ்தமித்தபிறகு என் பிதா மவுத்தானார். நான் அல்லாவிடமிருந்துவந்த கிருபையின் அடையாளத்தைக்கண்ட முதல் நாள் அதுவே. எனது தகப்பனின் கீழ் யான் நாற்பது வருடத்தைக் கழித்தேன். அவர் இந்தசீவியத்திலிருந்து போனதோடு எனக்கோர் புது யுகம் உதயமானது. அதுமுதல் யான் தெய்வ அறிவிப்புகளை அதிசயமான தன்மையில் பெற்றுக்கொள்ளத் துவங்கினேன். ஆண்டவனின் இந்தக் கருணையை யென்பக்கமாய் இழுத்துக்கொண்டது என்னுடைய எந்த அமலென்று என்னால் சொல்லக்கூடாது. ஆகிலும் என் மனம் இயற்கையாய் அல்லாவுக்கு விசுவாசமுள்ளதா யிருப்பதையும் இதைத் தடுக்க வுலகத்திலுள்ள வொரு தத்துவத்தாலும் இயலாதிருப்பதையும் யான் உணர்கின்றேன்" என்றே.

மிர்ஸா குலாம் அகுமது சூபியாக்களுடைய தரீகருகளொன்றிலும் சேர்ந்தவ ரல்லையாம். அவர் சில்லா இருப்பதையும் இது போற்கொத்த காரியங்களையும உவந்தவ ரல்லையாம். அவர் தனித்திருந்து குறுஆனைப் படிப்பதையே தமது வணக்கமாய்க் கொண்டிருந்தனர். ஒருநாள் அவருக்குத் தரிசனையில் ஓர் வயோதிபான மனிதன் தோன்றி துபுவ்வத்தின் சட்டப்படி தெய்வ ஒளிவுகளைப் பெற்றுக்கொள்வதற்கு நோன்பு பிடிப்பது ஆவசியகமான காரியமென்று தெரிவித்தனர். இந்தத் தரிசனைப்படி அவர் எட்டு அல்லது ஒன்பது மாதங்களாக நோன்பு பிடித்தனர். தீனையும் குறைத்துக்கொண்டனர்.

ஆகிலும் அவர் இவ்வாறு செய்வதை யொருவருக்காவது தெரிவிக்கவில்லை. அக்காலத்தில் அவருக்குப் பல தரிசனங்களுண்டு பட்டன. அவை பிற்காலத்தில் நிறைவேற்றப் பட்டனவாம்.

அக்காலத்தில் மிர்ஸா குலாம் அகுமது உர்து பத்திரிகைகளில் மார்க்கத்தைக் குறித்து எழுதுகிறவரா யிருந்தனர். அவரின் எழுத்துகள் உலகத்தாரின் கவனத்தை யிழுத்துக்கொண்டன. 1880 ம் ஆண்டு அவர் "பருஹினி அகுமதிய்யா" என்ற தம்முடைய நூலின் இரண்டு பாகங்களைப் பிரசுரித்து அவற்றிலுள்ளவைகளை நிராகரணஞ் செய்பவர்களுக்கு 10,000 ரூபா வெகுமதி கொடுப்பதாய்த் தெரிவித்தனர். இரண்டு வருடங்களுக்குப் பிறகு அதாவது ஹிஜறத்துப் பதின்மூன்றாம் நூற்றாண்டின் கடைசியில் அவர் மேற்படி நூலின் மூன்றாம் பாகத்தைப் பிரசுரித்தனர். அதில் அவர் தமக்கு அல்லாகுத்த ஆலாவிட மிருந்து கிடைத்ததாய்ச் சொல்லுகிற அறிவிப்புகளை (வஹிகளை) தந்திருக்கிறார். அந்த அறிவிப்புகளொன்றில் அவரே ஹிஜறத்து பதினாலாம் நூற்றாண்டில் வருகிறதாய்ச் சொலலப்பட்ட சீர்திருத்துவோ ரென்று காட்டப்பட்டிருந்தது. ஒவ்வொரு நூற்றாண்டின் துவக்கத்தில் ஒவ்வொரு சீர்திருத்துகிறவர் முஸ்லிம்களுக்கனுப்பப்படுவார் என்று ஹதீது இருக்கிறதாகவும் அந்த ஹதீதுப்படி மிர்ஸா குலாம் அகுமது பதினாலாம் நூற்றாண்டின் சீர்திருத்துகிறவர் தானென்றும் அக்காலத்தில் மனிதர்கள் ஏற்றுக் கொண்டார்களாம். அதற்கு இரண்டு வருடங்களுக்குப் பிறகு "பருஹினி அகுமதிய்யா" என்னும் கித்தாபின் நான்காம் பாகம் பிரசுரிக்கப்பட்டது. அதில் இஸ்லா மார்க்கத்துக்கு விரோதமான அன்னிய மார்க்க கற்பனைகளெல்லாம் மறுக்கப்பட்டிருந்தன. அதில் அவர் தமக்கு அல்லாகுத்த ஆலாவால் தெரிவிக்கப்பட்டதாய்ச் சொல்லுகிற செய்திகள் தரப்பட்டிருப்பதோடு அவற்றில் அவர் அல்லாவுடைய தூதரென்றும், நபியென்றும், எச்சரிக்கிறவரென்றும், ஈஸா என்றும், மஸீஹ் என்றும் அழைக்கப்பட்டிருக்கிறார். இப்படியிருந்தும் மேற்படி கித்தாபு இஸ்லா மார்க்க கற்பனைகளைத் தக்கபடி விளக்கிக் காட்டும் அரிய நூலென்று உலமாக்களாலும் மற்றவர்களாலும் ஏற்றுக்கொள்ளப் பட்டிருந்ததாம். அதுமுதல் ஏழு வருடம் வரையில் மிர்ஸா குலாம் அகுமது வேதத் தலைவராயும் முஸ்லிம்களின் அருள்பெற்ற சீர்திருத்துவோராயும் அங்கீகரிக்கப் பட்டிருந்தார். 1888 ம் ஆண்டு டிஸம்பர் மாதம் 1 ந் திகதி அல்லாகுத்த ஆலா மனிதர்களிடம் பையத்து எடுக்கும்படி தமக்குக் கட்டளைபண்ணியதாக மிர்ஸா குலாம் அகுமது வெளிப்படுத்தினார். ஆகிலும் அவர் 1891 ம் ஆண்டு தாமே ஆகர் ஸமானில் வருவாரென்று உறுதிசொல்லப்பட்ட மஸீகும் மஹதியும் என்று கூறினார். இதனோடு அவருக்கு விரோதம் கிளம்பிற்று. அவர் பொய்யனென்றும், வஞ்சகனென்றும், வேதப்புரட்டன் என்றும், தஜ்ஜா லென்றும் கண்டிக்கப் பட்டார்.

அக்காலமுதல் மிர்ஸா குலாம் அகுமதுக்கு எதிர்ப்புண்டாகி விட்டது. இந்துக்களும், முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும், ஸிக்குகளும் அவருக் கெதிரிகளாய்த் தோன்றி விட்டார்களாம். அவ

ரோர் சமயபேதி யெனக்காட்டிபத்துவாக்கள் உலமாக்களால் வெளிப்படுத்தப் பட்டன. சிலவுலமாக்கள் அவரைக்கொல்லக் கூடுமென்றும் அவரின் ஆஸ்திகயக கொளளை யெடுக்கலாமென்றும் வெளிப்படுத்தினார்களாம். அவரின் சிஷர்களுள் ஒருவராஞ மவுலவி அப்துல் லதீபு அவரின் கொள்கையை அபுகானிஸ்தானுக்குக் கொண்டு போனதற்காய் அங்கு கொல்லப்பட்டார். பத்தாலாவிலுள்ள மவுலவி முகம்மது ஹுஸைன் என்பவருக்கும், போப்பாலிலுள்ள மவுலவி முகம்மது பஷீர் என்பவருக்கும் மிர்ஸா குலாம் அகுமதுக்கும் இடையில் பகிரங்கமாய்த் தர்க்கம் நடந்தது. அவருக்கு விரோதமாய் அவருடைய சத்துருக்களால் பல வழக்குகள் கொண்டுவரப்பட்டன. அவைகளில் அவரே ஜயமடைந்தனராம். மேலும் அவர் தமது சத்துருக்களோடு முபாஹலா நடத்தி இருக்கிறார். முபாஹலா என்பது தர்க்கித்துக்கொள்ளுகிற இருவர் அல்லாகுத்த ஆலாவிடம் அவர்களுள் பொய்யனும் அநியாயகாரனுமானவன் மற்றவனின்முன் இறந்துபோக வேண்டுமென்று கேட்கிறதே. இவ்விதமான முபாஹலாவிலும் அவர் அல்லாகுத்த ஆலாவால் காக்கப்பட்டாரென்றும் அவரின் சத்துருக்கள் அவர் முன்னே இறந்துபோனார்களென்றும் சொல்லப்படுகிறது.

மிர்ஸா குலாம் அகுமது அபுகானிஸ்தான் அமீர் அவர்களுக்கோர் நிருபமெழுதி தம்மை மஸீஹாய் ஒப்புக்கொள்ளும் படி கேட்டிருக்கின்றார். அவர் காலஞ்சென்ற விக்டோரியா இராணி அவர்களைக்குறித்து இயற்றிய இரு புத்தகங்களிலும் ஈஸா அலை ஹிஸ்ஸலாம் மவுத்தாய்ப் போனதாய்த் தெரிவித்திருந்ததோடு இராணி அவர்களை இஸ்லாமார்க்கத்தை யொப்புக் கொள்ளும்படிகேட்டுமிருந்தார். அந்நூற்களிலொன்று இங்கிலீஷில் மொழிபெயர்க்கப்பட்டு இராணி அவர்களுக்கு அனுப்பப் பட்டதாம்.

அவரைக் கொலைசெய்தற்குச் சிலர் எத்தனித்தார்களென்றும் அவர்கள் ஜயமடையவில்லையென்றும் அவர் சுபாவமாகவே மரணிப்பாரென்று அவருக்கு அல்லாகுத்த ஆலா தெரிவித்திருக்கின்றாரென்றும், அவர் ஏறக்குறைய எண்பது வயதுக்கிருப்பாரென்று அவருக்குத் தெய்வ அறிவிப்பு கிடைத்திருக்கிறதாயும் சொல்லப்படுகிறது. அவருக்கிப்போது வயது எழுபதாம். அவருக்கு அல்லாகுத்த ஆலாவால் அறிவிக்கப்பட்டதாக அவருடைய கித்தாபுகளில் சொல்லப்பட்டிருக்கிற காரியங்கள் இப்பொழுது நிறைவேறுகின்றனவாம். அவர் தூய்மையானவரென்றும் தம் வீட்டிலுள்ளவர்களாலும் பிறராலும் மிக்க மரியாதையோடு பாவிக்கப்படுகிறாரென்றும் அவருடைய துஆக்கள் அல்லாகுத்த ஆலாவால் ஏற்கப்படுகின்றன வென்றும், அவரின் அந்தரங்கமான காரியங்களை யறிந்திருக்கின்ற அவரின் மனைவி மக்களும் அவருண்மையுள்ளவரென்று நிச்சயித்திருக்கிறார்களென்றும், தங்களுக்காய் துஆ கேட்கும்படி அவரைப் பிள்ளைகளும் வேலைக்காரர்களும் கேட்கின்றார்களென்றும், அவரிடம் அன்பப்படுகிறவர்கள் போனால் அல்லாகுத்தாஆலாவிடம் தாழ்மையோடு துஆ கேட்கும்படி அவர்களுக்கு குலாம் அகுமது சொல்லுகிறாரென்றும், அவர் வீட்டிலே நீண்டநேரம் தொழுகிற

ர் என்றும் பள்ளிவாசலில்அப்படி அவர் நீண்ட நேரம் தொழுவதில்லையென்றும், அவர் வீட்டிலும் வெளியேயும் அல்லாகுத்தஆலாவின் மகிமையைக்குறித்தே பேசுகின்றாரென்றும், தீனையும் உடைமையும் அதிகமாய்க் கவனிக்கிறவரல்லவென்றும், தோழர்களோடும் விருந்தாளர்களோடும சாப்பிடுதற்கு விருப்பமுள்ளவரென்றும, பொறுதியுள்ளவரென்றும் கோபமற்றவரென்றும, இயல்பான நடக்கை யுடையவரென்றும், நேசர்கள்மீது பட்சமுள்ளவரென்றும் சொல்லப்படுகிறது.

ஈஸா அலைகிஸ்ஸலாம் மவுததாகவில்லை யென்று முஸ்லீம்கள் நம்பிக்கொண்டிருப்பது தவறென்றும் அவர்கள் இறந்துபோனார்களென்றும் அவர்களுடைய ஆவியிலும் மகத்துவத்திலும் தம்மை அல்லாகுத்தஆலா உயர்த்தியிருக்கின்றானென்றும், ஆகிர் ஸமானில் மஸீகின் வரவைக்குறித்துச் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்களின் படியே இது நடந்திருக்கிறதென்றும் மிர்ஸா குலாம்அகுமது கூறுகிறார். அவர் தாமே மஸீகு என்பதற்குள்ள அத்தாட்சிகளை பதஹ் இஸ்லாம், தவுஸீஹி மறும், இஸாலாயி அவுஹாம் ஆகிய மூன்று கித்தாபுகளில் விவரித்திருக்கிறாராம். மகுதி வெளியாகும் காலத்தில் சம்பவிக்குமென்று தீர்க்கதரிசனத்தில் சொல்லப்பட்டிருந்தபடி அவர் வெளியான காலத்தில் றமுளான் மாதத்தில் 13 ந் திகதியிலும் 28 ந் திகதியிலும் சந்திர கிரகணமும் சூரிய கிரகணமும் உண்டுபட்டன வென்று சொல்லப்படுகின்றது. அதுமுதல் அவரை விசுவாசித்த மனிதர்களின் தொகை அதிகப்பட்டு 1896 ம் ஆண்டில் அகுமதிய்யா கூட்டத்தில் 313 பேர்களிருந்தார்கள். ஆகிலும் அது முதல் வேறு அதிசயமான காரியங்கள் சமபவித்தபடியாலும்அவரோடு வாதித்துக்கொண்டிருந்த சில பிரதானிகள் அவர் சொல்லிய தீர்க்கதரிசனப்படி இறந்துபோனதாலும் அவரை அதிகமான மனிதர்கள் தொடரவாயிற்று. 1901 ம் ஆண்டு பம்பே மாகாணத்தில் 11,087 பேர்களும் பஞ்சாபில் 50,0C0 பேர்களும் அகுமதிய்யாக் கூட்டத்தைச்சேர்ந்திருந்தார்கள். அவர்களுடைய தொகை யின்னும் அதிகப்பட்டு இப்பொழுது உலகமுழுதிலும் 3 லட்சம் பேர்களுக்கதிகம் இருக்கிறார்களென்று மதிக்கப்படுகிறது. அவர்கள் இந்தியாவில் மாத்திரமல்ல, அபுகானிஸ்தான், பெர்ஷியா, அறபு, மிஸ்று, ஆஸ்திரேலியா, பிறிட்டீஷ் ஆப்புரிக்கா, அமரிக்கா ஆகிய தேசங்களிலு மிருக்கின்றார்கள்.

மிர்ஸா குலாம் அகுமது தாமே தம்மைக் குறித்துக் கீழவருமாறு எழுதியிருக்கின்றார்:—

“ அல்லாகுத்தஆலா அவனுடைய படைப்புகளின் பேரிலே எனக்கு மஸீகு என்கிற நாமத்தைத் தந்திருக்கின்றான். நான் ஈஸா அலைகிஸ்ஸலாத்தின் றாகிலும குணத்திலும் அனுப்பப்பட்டிருப்பதாலும அதே அச்சில் வார்க்கப்பட்டிருப்பதாலும் அவரின் அவ்தாரமாயிருக்கின்றேன். அப்படியே அல்லாகுத்த ஆலாவின் கட்டளையை மீறி நடக்கும் மனிதர்களைச் சீர்திருத்துகிற தொழிலெனக்கிருப்பதால் நான் முகமமது அகுமது என்ற நாமத்தைப் பெற்றிருக்கின்றேன். ஆகையால் யான் அல்லாகுத்த ஆலாவின் ஒருமையைப் பரப்புகிறதற்காக பரிசுத்த நபியான முகம்மது சல்லல்லாகு அலைகிவ சல்லம அவர்களின் றாகிலும் குணத்தி

னும் அனுப்பப்பட்டும் அதே அ
ச்சில் வார்க்கப்பட்டுமிருக்கின்
றேன், இப்படியே யான் ஈஸா
மஸீஹாகவும் முகம்மது மகுதி
யாகவும் இருக்கின்றேன். மஸீ
ஹ் என்பது ஈஸா அலைகிஸ்ஸலா
முக்குக் கொடுக்கப்பட்ட வோர்
பட்டம். அதன் அர்த்தம் அல்லா
குத்த ஆலாவால் அபிஷேகம்பண்
ணப்பட்டவரும், ஆசிர்வதிக்கப்
பட்டவரும், உலகத்தில் அல்லா
குத்தாஆலாவின் பிரதிநிதியான
வரும் உண்மையும் நீதியுமுள்ளவ
ரும் என்பதுவே. மகுதியென்ப
து முகம்மது சல்லல்லாகு அலை
கி வஸல்லம் அவர்களுக்குக் கொ
டுக்கப்பட்டபட்டம். அதனர்த்தம்
இயற்கையாய் வழிகாட்டப்பட்ட
வொருவரென்பதும், உண்மைக்
குரித்தாளியென்பதும், அல்லாகு
த்த ஆலாவின் "வழிகாட்டி" எ
ன்ற இலக்ஷணம் அவரில் வெளி
ப்படுகிறவ ரென்பதுமே. அல்
லாகுத்த ஆலாவின் கருணையும்
தயவும் என்னை இந்த இரு பட்ட
ங்களுக்கும் இந்த காலத்தில உரி
த்தாளியாக்கிவிட்டன வோடு அ
வற்றை என்னில் ஒன்றாய் வெளி
ப்படுத்தியும் விட்டன. ஈஸா மஸீ
கு முகம்மது மகுதி என்ற பட்ட
ங்களுக்கு எனக்குள்ள உரித்தின்
விளப்பம் இதுவே. இந்த வெளி
ப்படுதல் உண்டாயிருக்கிற தன்
மைக்கு இஸ்லாத்தில் பறாஸ் எ
ன்று சொல்லப்படுகிறது. ஆத
லால் நான் ஈஸாவினதும் முகம்
மதினதும் பறாஸா இருக்கின்
றேன். பறாஸ் என்பதின் அர்த்
தம் ஒருவர் முக்கனியாவான த
ன்மையில் இன்னு மொருவரில்
வெளியாகி அவ்விருவரின் குண
ங்களும் இலக்ஷணங்களும் ஒத்தி
ருப்பதே. என்து றாகில் அந்த
இரு நபிமார்களின் றூகுகள் கல
ந்திருக்கின்றன. மஸீகுடையதன்

மையில் என்னுடைய கடமை யா
கிறது மஸீகு உலகத்தில் தோன்றி
னபொழுது வேதபுத்தங்களை திற
த்திவிடுவார்என்று தீர்க்கதரிசன
த்தில் சொல்லியிருக்கிறபடி முஸ்
லிம்கள் மிருகத்தன்மையில் தாக்
கி இரத்தஞ் சிந்துகிறதை நிறுத்
துகிறதே. மகுதியுடைய தன்மை
யில் என்னுடைய தொழிலாகிற
து அல்லாகுத்தஆலாவின் ஒரு
மையை பரலோக அடையாளங்
களை [திருஷ்டாந்தங்களைக்] கொ
ண் டிஸ்தாபிப்பதே, திருஷ்டாந்
தங்களைக் கொண்டே எங்கள் பரி
சுத்த நபிசல்லல்லாகு அலைகிவ
ஸல்லம் அவர்கள் விக்கிரகாரா
தனைக்கார அறபுதேச சன
ங்களின் மனத்தில் அல்லாகு
த்தஆலாவின் மகிமையையும் ச
ர்வ தத்துவத்தையும் சிறப்பை
யும் பதித்தார்கள். எனது எஜ
மானைப்போலவே நானும் பரி
சுத்த ஆவியால் ஆணைச்செய்யப்
படுகின்றேன். முற்காலத்து நபி
மார்களுக்குத் தோன்றின றப்பு
மூஸாவுக்கு சீனாமலையிலும், ஈ
ஸாவுக்கு ஸீயர்மலையிலும், முகம்
மது சல்லல்லாகு அலைகிவசல்
லம் அவர்களுக்கு பறன் மலையி
லும் தோன்றினான், அந்த றப்பு
அவனின் சர்வ மகிமையில் என
க்குத் தோன்றினான். ஈஸா அலை
கிஸ்ஸலாத்தைக்குறித்து கிறிஸ்
தவர்களுள் அதிகப்பற்றுனவர்க
ள் கொண்டிருக்கிற நம்பிக்கை
தவறானதென்றும் நேர்வழியை
விட்டும் விலகியதென்றும் எனக்
கு அல்லாகுத்தஆலா தெரிவித்
திருக்கின்றான். எனது உரித்து
க்குப் பரலோக அடையாளங்கள்
துணைச்செய்கின்றன, எனது து
ஆக்கள் ஏற்றுக்கொள்ளப்படுகி
ன்றன, வருங் காரியங்கள் எனக்
கு அறிவிக்கப்படுகின்றன. அல்
லாகுத்தஆலாவே யன்றி வேறு

ருவரும் அறியக்கூடாத அந்தரங்கமான காரியங்கள் எனக்குத் தெரிவிக்கப்படுகின்றன" என்றே.

ஆகர் ஸமானில் வருகிற மகுதி இரத்தஞ் சிந்துகிறவரென்றும் அவர் மஸீகோடு சேர்ந்து இஸ்லமார்க்கத்தை அநுசரிக்க அல்லத்தட்டுகிற காபிரீங்களுக்கெதிராய் யுத்தஞ் செய்வாரென்றும் முஸ்லிம்கள் சொல்வது தவறென்றும், அவ்விதமாய்க் கூறுகிற ஹதீதுகள் பொய்க்கட்டென்றும், மகுதி என்றதும் மஸீகு என்றதும் அல்லாகுத்த ஆலாவின் ஒரே தூதரின் இரு நாமங்களென்றும், "லாமகுதி இல்லா ஈஸா" (மகுதியில்லை ஈஸா அல்லாமல்) எனறும் "ஹுவ நபிய்யுன்மின்கும்" [அவர் உங்களில் நின்றுமுள்ளவோர் நபி] என்றும் ஹதீது வந்திருக்கிற தென்றும், ஹதீதுகளைப்பற்றிய மெய்யான ஆறு கித்தாபுகளி லொன்றில் மேற்படி ஹதீது தாப்பட்டிருக் கிறதென்றும், அவரின் தூதின் மெய்யான தன்மையைக்காட்டும் ஹதீது ஸஹீஹ் புகாரியில் வருகிறதென்றும், அதுவே மெத்தவும் நம்பத்தக்க ஹதீதுக் கித்தாபென்றும், அவர் வேத யுத்தங்களை நிறுத்திவிடுவார் என்று ஸஹீஹ் புகாரியில் வருகிறதென்றும், அகுமதிய்யாக் கொள்கைக்காரர்கள் கூறுகின்றார்கள்.

அகுமதிய்யாக் கூட்டத்தின் பிரதான கொள்கையாகிறது மிர்ஸா குலாம் அகுமது ஆகர் ஸமானில் வருகிறவரென்று முன் அருளிகப்பட்ட மஸீஹ் என்பதே. இந்தக்கொள்கை மேற்படி கூட்டத்தார் கிறிஸ்தவர்களோடும் முஸ்லீம்களோடும் முட்டிக்கொள்ளச்செய்துவிட்டது. கிறிஸ்தவர்களும் முஸ்லிமகளும் ஆகிர் ஸமானில் ஈஸாஅலைகிஸ்ஸலாம் தாமே வானலோகத்திலிருந்து உலகத்துக்கு வருவார்களென்று விசுவாசிக்கிறார்கள். இவர்களின்சொல்லைநிராகரிக்க அகுமதிய்யா கூட்டத்தார் சொல்லுகிற நியாயங்களாவன:—

யூதர்களைப் பார்த்து ஈஸா அலைகிஸ்ஸலாம் நீங்கள் என்னை மஸீஹாய் ஒப்புகொள்ள வில்லையென்று கேட்டதற்கு எங்கள் வேதத்தில் மஸீகுவாமுன் இல்யால வானலோகத்திலிருந்து வருவாரென்று சொல்லப்பட்டிருப்பதாலும் இல்யாஸ் வாாதபடியாலும நீங்கள் மஸீகு என்று நாங்கள் ஒப்புக்கொள்ளக் கூடியதாயில்லை யென்று யூதர்கள் விடைபகர்ந்தார்கள். அப்பொழுது ஈஸா அலைகிஸ்ஸலாம் யூதர்களைப்பார்த்து மஸீகு வருவதற்குமுன் இல்யாஸ் வருவாரென்று சொல்லப்பட்டது மெய். அதன்கருத்து இல்யாஸின் ஆவியிலும் தத்துவத்திலும் ஒருவர் அனுப்பப்படுவார் என்றதே (லூக்கு 1-17), அப்படியே யெஹ்யா (யோவான்) இல்யாஸின் ஆவியிலும் தததுவததிலும் அனுப்பப்பட்டார். (மத்தேயு, 11—14). அவரை நீங்கள் இல்யாஸாய் ஒப்புக்கொள்ளுங்கள் என்று கூறியிருக்கிறார்கள். இப்படியே அகுமதிய்யா கூட்டத்தாரும் கிறீஸ்தின் இரண்டாவது வருகைக்குப் பொருள் வைத்து தங்களின் தலைவரான குலாம் அகுமது கிறீஸ்தின் ஆவியிலும் தத்துவத்திலும் அனுப்பப்பட்டாரென்று கூறுகிறார்கள்.

ஈஸா சிலுவையில் மரித்தாரென்றும், அடக்கம்பண்ணப்பட்டாரென்றும், மூன்றும் நாள் உயிர்த்தெழுந்தாரென்றும் கிறிஸ்தவர்கள் சொல்லுகிறார்கள். இதற்கு மாறாய் ஈஸா சிலுவையில் மரிக்க

வில்லை ஆகிலும் மூர்ச்சையானாரென்றும், அவர் அடக்கம்பண்ணப்படவில்லை ஆகிலும் கல்லில் வெட்டப்பட்ட விஸ்தாரமானவோர்அறையில் வைக்கப்பட்டாரென்றும, அவர் இறந்துதிரும்பவுயிர்த்தெழும்பவில்லை ஆகிலும் மூர்ச்சையிலிருந்து தெளிவடைந்தாரென்றும், அவர் வானத்துக்குப்போகவில்லை ஆகிலும் காணமற்போன இஸ்றவேல் ஜனங்களுக்கு (பனியிஸ்ருயிர்) போதிப்பதற்காக அபுகானிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் வந்து அங்குமரணித்து இப்பொழுது கஷ்மீரில ஸிரினகர் என்னும் தலத்தில் கான்யார்தெருவில் அடக்கம்பண்ணப்பட்டிருக்கின்றாரென்றும், அங்கு அவர் யூஸ் அஸாப்பு, சஹஸாதாநபி, நபி ஸாஹிபு என்றநாமங்களைக் கொண்டு அழைக்கப்படுகிறாரென்றும், அபுறுனிப்பாஷையி லுள்ள "ஏசு" என்ற சொல்லே "யூஸ்" என்று புறண்டிருக்கிறதென்றும் அஸாபு என்பதற்கு அர்த்தம் காணமற்போன மந்தைகளைச் சேர்த்தவர் என்றும், இளவரசரான நபி (சஹஸாதாநபி) என்றபட்டம் ஈஸாவுக்கிருந்த தென்றும் அருமதிய்யாக்கள் கூறுகிறார்கள்.

முதலாவது, பைபளிலுள்ள அத்தாட்சிகள். (1) ஈஸா அலைஹிஸ்ஸலாம் தமது விதியை யூனுஸ் அலைஹிஸ்ஸலாத்தின் விதிக் கொப்பிட்டார்களென்று மத்தேயு 12ம் அதிகாரம் 39-40ம் வசனங்களிலும் லூக்கு 11ம் அதிகாரம் 20-30ம் வசனங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது. யூனுஸ்நபி மீனின் வயிற்றில் எப்பொழுதாவது இறந்திருக்கவில்லை. ஆகிலும் அவரை இறந்தமனிதனாகவே கவனிக்கவேண்டியதாயிருந்தது. ஆதலால் யூனூஸ்நபியைப்போல் தாமும் சிலுவையிலிருப்பதாக ஈஸாநபி தீர்க்கதரிசனமா யறிவித்திருக்கிறார்கள். (2) இஸ்ரவேலின் வீட்டைச் சேர்ந்த காணமற்போன மந்தைகளுக்குத் தாமனுப்பப்பட்டதாய் ஈஸா சொன்னாரென்று மத்தேயு 15ம் அதிகாரம் 24ம் வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் காணமற்போனதைத் தேடிக்காப்பாற்றவே தாம் அனுப்பப்பட்டதாய்ச் சொன்னா ரென்று லூக்கா 19ம் அதிகாரம் 10ம் வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இஸ்றவேல் கோத்திரத்தவர்களின் (பனியிஸ்ருயில்) 12 கூட்டங்களில் 2கூட்டமே பலஸ்தீனிலிருந்ததென்றும் மற்ற 10கூட்டங்களும் முன்னமே கிழக்கில் குடியேறி விட்டனவென்றும் நிச்சயமாய் அறியப்பட்டிருக்கிது. இவைகளே காணமற்போன மந்தைகள். இவைகளைத்தேடி காப்பாற்றவேண்டியதா யிருந்தது ஆதலால் இந்தக் கோத்திரங்களிடமே ஈஸா தாம் சிலுவையிலறையப்பட்டபின்னர் போய்விட்டார். (3) கிறீஸ்தை சிலுவையில் அறையும்படி தீர்த்த பைலேட் என்னும் நியாயாதிபதியின் மனைவிக்குத் தேவதூதர் தோன்றினார் என்று மத்தேயு 27ம் அதிகாரம் 19ம் வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஈஸாவைக்காப்பாற்றுதற்கு அல்லாகுத்தஆலா நாடாதிருக்கில் தேவதூதர் பைலேட்டின் மனைவிக்குத்தோன்றி ஈஸாவைக் காக்கும்படி கேட்கவேண்டியதென்ன? (4) ஈஸா பிடிக்கப்பட்டதற்கு முந்தின இரவில் தம்மைக்காக்கும்படி அல்லாகுத்தஆலாவிடம் பிரார்த்தனை செய்திருக்கிறார்கள். நீதியுள்ளமனிதன் துன்பமானநேரத்தில் கேட்கிற கேள்வி அல்லாகுத்த ஆலாவால் தள்ளப்படுவதில்லை. இது

அவர் சிலுவையிலிருந்து உயிரோடு இறக்கப்பட்டாரென்பதற்கு அத்தாட்சியாயிருக்கிறது. சிலுவையில் மரணிப்பதைவிட்டுங்காப்பாற்றுவதாய் அவருக்கு அல்லாகுத்தஆலா வாக்களித்தபடியினாலேயே அவர் சிலுவையில் அறையப்படும்பொழுது "என்தேவனே, என்தேவனே, என்னை யேன் நீ கைவிட்டாய்" என்று சத்தமிட்டார் (மத்தேயு 27-46.) ஈபுறு 5ம் அதிகாரம் 7ம வசனத்தில் ஈஸாவின் பிரார்த்தனை யேற்றுக்கொள்ளப்பட்டதாய்த் தெளிவாகக் காட்டப்பட்டிருக்கிறது. "அவர் உரத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் அவனைப் பிரார்த்தித்து மண்டாடியபொழுது அவன் அவரை மரணத்திலிருந்து காப்பாற்றக் கூடியவனாயிருந்தான். அவரஞ்சிய காரியத்தில் அவரின் கேள்விக்குச் செவிகொடுத்தான்" என்று சொல்லப் பட்டிருக்கிறது. ஈஸா சிலுவையில் மரிக்கவில்லையென்பதற்கு இதைப்பார்க்கிலும் தெளிவான அத்தாட்சி வேண்டியதில்லை. (5) ஈஸா சிலுவையில் சில மணித்தியாலங்கள் மாத்திரமே இருந்தார். சிலுவையிலறைவதாலுண்டாகும் மரணம் தாமதமானது. ஈஸாவோடு சிலுவையிலறையப்பட்ட இரண்டு மனிதர்களும் கீழேயிறக்கப்பட்டபொழுது அவர்களிலுயிர் இருந்தது. ஆதலால் ஈஸா அவ்வளவு சுறுக்கில் மரணித்திருக்கக்கூடாது. [6] அவரின் பக்கத்தில் குற்றியபொழுது இரத்தம் பாய்ந்தது. அதுவும் உயிருந்ததற்கு அடையாளம். [7] ஈஸாவோடு சிலுவையிலறையப்பட்ட இரு கள்ளர்களினதும் கால்கள் முறிக்கப்பட்டன. ஈஸாவுக்கப்படிச்செய்யவில்லை. [8] மார்க்கு 15, 44 இல் சொல்லப்பட்டிருக்கிறபடி பைலேட் தானும் ஈஸா அந்தமட்டுச் சுறுக்கில் இறக்கக்கூடுமென்று நம்பவில்லை. [9] ஈஸா தம்மோடு சிலுவையிலறையப்பட்ட இரு குற்றவாளிகளைப்போல் அடக்கம் பண்ணப்படவில்லை. அவரின் ஓர் சிஷன் அவரையொப்பெடுத்து கவனத்தோடு பாதுகாத்து கல்லில்வெட்டப்பட்ட வோர்விஸ்தாரமான அறையில்வைத்தனர். (10) மூன்றாம்நாள் அவரின் பிரேதக்குழியைப்பார்த்தபொழுது அதன்வாயிலில் வைக்கப்பட்டிருந்தகல்லு நீக்கப்பட்டிருந்தது. அவர் அற்புதமாய் உயிர்த்தெழும்பி இருப்பின் கல்லுநீக்கப்பட்டிராது. [11] மேரி [மரியம்] அவரைக் கண்டபொழுது தோட்டக்காரனென்று நினைத்துக்கொண்டனர். [யோவான், 20, 15]. இது ஈஸா தோட்டக்காரனைப்போல் வேஷமாறிக் கொண்டிருந்ததைக் காட்டுகின்றது. இறந்த ஈஸா திரும்ப உயிர்த்தெழுந்து இருப்பின் வேஷமாறுதற்கு அவசியமில்லை. [12] அவரைத்திரும்ப அவரின் சிஷர்கள் கண்டபொழுது அவர் மாமிசத்தால் உண்டாக்கப்பட்ட அதே சரீரத்திலிருந்தார். அதிலிருந்த காயங்கள் கையைப்போடக்கூடியமட்டு ஆழமாயிருந்தன. அவரின்னும் பசியுள்ளவராயும் தமது சிஷர்களைப்போல் தின்கிறவராயும் இருந்தனர். [லூக்கா 2, 39-43]. [13] ஈஸா தனது இரு சிஷர்களோடு நடந்து கலிலீக்குப் பிரயாணஞ் செய்தார். இது அவர் தாம் துன்பப்படுத்தப்பட்ட தேசத்திலிருந்து பாதுகாப்புள்ள விடத்துக்கு வோடினாரென்று காட்டுகின்றது. வானத்துக்குப் போவதே அவரின் நோக்கமாயிருந்தால் அவர் கலிலீக்குப் பிரயாணஞ் செய்யவேண்டியதில்லை. கலிலீ வானத்துக்

குப்போவதற்கு உத்தரவுச்சீட்டுப்பெறும் ஸ்தானமல்லவே. [14] ஈஸா சிலுவையி லறையப்பட்டதின் பின்னர் வெளிப்பட்ட தருணங்களிலெல்லாம் தம்மை மறைத்துக்கொள்பவராயும் ஒழித்துக்கொள்ளுகிறவராயும் இருந்தனர். உயிர்த்தெழுந்த ஈஸா பகிரங்கமாய்த் தோன்றுவாரன்றி தம்மை யூதர்கள் கண்டு பிடித்துக்கொள்வார்களென்று அஞ்சமாட்டார்.

இரண்டாவது நியாயமாகிறது யூனானி வைத்தியர்களிடம் மர்ஹம் ஈஸா, மர்ஹம் ஹவாரிய்யூன், மர்ஹம் றசூல் என்று அழைக்கப்படுகிறவோர் தைலம் இருப்பதே. இந்தத் தைலம் பலவைத்திய நூற்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அன்நூற்களின் நாமங்கள் "ரிவியூ ஆப் றிலீஜன்ஸ்" 2ம் புத்தகம் 10 ம் இலக்கச்சஞ்சிகையில் காட்டப்பட்டிருக்கின்றன. இந்தத்தைலம் ஈஸாவுக்காக அவரின் அப்போஸ்தலர்களால் செயயப்பட்டதென்று சொல்லப்படுகிறது. இந்தச்சொல்லே அந்தத் தைலத்தின் பெயர்கள் பலப்படுத்துகின்றன. அது காயங்களை சுகப்படுத்தும் குணமுடையதென்று வைத்தியர்கள் வியந்துபேசுகிறார்கள். ஈஸாவுக்கு சிலுவையிலுண்டுபட்ட காயங்களைத்தவிர வேறுகாயங்களுண்டுபட்டதற்குச் சாட்சியில்லை. ஆதலால் சிலுவையில் உண்டுபட்டகாயங்களுக்காகவே மேற்படி தைலம் அவரின் அப்போஸ்தலர்களால் செய்யப்பட்டதென்று தீர்மானிக்க வேண்டியதாயிருக்கிறது.

அகுமதிய்யா கொள்கைக் காரர்களின் மூன்றாவது நியாயம் ஸிறிநகரிலுள்ள கபர். இது ஈஸாவுடைய கபர் என்பதற்குப் பல அத்தாட்சிகளிருக்கின்றன. [1] அது யூஸ்அஸாபு என்றநாமத்தையுடைய வோர் மனிதனின் கபர் என்றும், அவர் ஓர் நபி யென்றும் இளவரசர் [சஹ்ஸாதா] என்றும் அறியப்பட்டிருந்தா ரென்றும், அவர் கஷ்மீருக்கு 1900 வருஷங்களுக்குமுன் மேற்குத் தேசத்திலிருந்து வந்தார் என்றும், கஷ்மீரிலுள்ள மனிதர்கள் சொல்லுகிறார்கள். அந்த கபர் நபிசாகிபின் கபர் என்று அறியப்பட்டிருக்கிறது. [2] இருநூறு வருடங்களுக்குமுன் இயற்றப்பட்ட "தாரிகு அஸாமி" என்றசரித்திர புத்தகத்தில் 82 ம் பக்கத்தில் மேற்படி கபறைக் குறித்துச் சொல்லி இருப்பதாவது:—"அதுவோர் நபியின் கபர் என்று பொதுவாய் அறியப்பட்டிருககிறது. அவர் அன்னியதேசத்திலிருந்து கஷ்மீருக்கு வந்த இளவரசர். அவர் பூரணமான தேவபத்தியும், நீதியும, வணக்கமும் உடையவர். அவரை அல்லாகுத்தா ஆலா வோர் நபியாக்கியிருந்தான். அவர் கஷ்மீரிலுள்ள ஜனங்களுக்குப் போதித்துக்கொண்டிருந்தனர். அவருடையபெயர் யூஸ் அஸாபு" என்றதே. [3] ஆயிரம் வருடங்களுக்கு முன் எழுதப்பட்ட இக்மாலுத்தீன் என்ற அறபுக் கித்தாபில் சொல்லப்பட்டிருக்கிறதாவது:— யூஸ் அஸாபு பல தேசங்களிலும் பட்டணங்களிலும் திரிந்து கடைசியில் ஒருதேசத்தில் சேர்ந்து அங்கு மவுத்தாகும் வரையில் குடியிருந்தார் என்றதே. [4] ஜோஸப் ஜேகப்ஸ் என்பவர் யூஸ அஸாபைப் பற்றிய வோர் பழைய செய்தியின் ஆதாரத்தைக்கொண்டு அவர் [ஜோஅஸாப்] கடைசியாய் கஷ்மீரிற்சேர்ந்து அங்கு மரணித்தார் என்று கூறியிருக்கின்றார். [5] யூஸ் அஸாபும் ஈஸாவும் ஒன்றே யென்று காட்டுகிற பல காரியங்களிருக்கின்றன. யூஸ் அ

ஸாபு அன்னிய தேச மனிதனேயன்றி கஷ்மீரில் அல்லது இந்தியாவில் உள்ளவரல்ல. அவர் நபி என்று முஸ்லிம்களால் அறியப்பட்டிருப்பதால் அவர் முஸ்லிமான வொலியாயிருக்கக் கூடாது. நபி என்ற சொல் அறபிலும் ஈபுறு பாஷையிலுமுள்ளது. அறபிலுள்ள நபி முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் மாத்திரமே. ஆதலால் யூஸ் ஆஸாபு ஈப்று [அபறானி] நபியாயிருக்கவேண்டும். யூஸ் அஸாபு இருந்தகாலம் ஈஸாவின் காலமே. யூஸ் அஸாபு நபியென்றும் இளவரசா என்றும் அழைக்கப்பட்டதுபோல் ஈஸாவும் அவ்விதமே நபியென்றும் இளவரசரென்றும் அழைக்கப்பட்டார். யூஸ் அஸாபின் போதனைகளும் ஈஸாவின் போதனைகளும் ஒததிருக்கின்றன. மேலும் யூஸ் அஸாப் தமது மார்க்கத்துக்கு புஷ்றா என்று பெயர் கொடுத்திருக்கின்றார். அறபிலும் ஈப்று பாஷையிலும சுவிசேஷத்துக்கு [இன்ஜீலுக்கு] புஷ்றா என்றும் பெயரிருக்கிறது.

நாலாவது நியாயம் மஸீகு ஈஸா சாவ பனீ இஸ்றாயில்கோத்திரத்தாரகளுக்கும் அனுபபப்பட்டார் என்றது. அவர்களுள் பத்துக் கூட்டத்தார்கள் கிழக்கு தேசத்தில் அபுகானிஸ்தானிலும், கஷ்மீரிலும் குடியிருந்தார்கள். ஆதலால் அவர்களிடம் ஈஸா போகிறது தேவையான காரியமாயிருந்தது. அபுகானியர்கள் தாங்கள் பனியிஸ்றாயில்களின் சந்ததியிலுள்ளவர்களென்று சொல்லுகிறார்கள். இதிலுண்மையில்லாதிருக்கில் யூதர்களோடு கோபமுள்ள அவர்கள் யூதர்களின் சந்ததியிலுள்ளவர்களென்று செல்ல மாட்டார்கள். இஸ்றாயிலிலிருந்து சந்தான வழிகாட்டக் கூடிய பல குடும்பங்கள் அபுகானிஸ்தானிலிருக்கின்றன. சரீர இலக்ஷணங்களில் அபுகானியர்களும் கஷ்மீரியர்களும் தங்களின் அயல் தேசத்தார்களுக்கு வித்தியாசப் பட்டிருப்பதோடு யூதர்களுக்கு ஒத்திருக்கிறார்கள். இவர்களின் உடைகளும், குணங்களும், வழக்கங்களும் ஒத்திருக்கின்றன. அபுகானியரின் நாமங்களும் கஷ்மீரியரின் நாமங்களும் பனியிஸ்றாயில் கோத்திரத் தவர்களின் நாமங்களுக்கொத்திருக்கின்றன. அபுகானிஸ்தானிலும் கஷ்மீரிலுமுள்ள பட்டணங்களின் நாமங்கள் பைபிலில் குறிக்கப்படுகிற பழைய சாம் தேசப் பட்டணங்களின் நாமங்களுக் கொத்திருக்கின்றன. சில நூலாசிரியர்களும பிரயாணிகளும் இவ்வாறே கூறியிருக்கின்றார்கள்.

குலாம் அகுமதே மஸீகு என்று சொல்லுகிற அகுமதிய்யாக்கள் மற்றும முஸ்லிமகளுக்குச் சொல்லுகிறதாவது:—அல்லாகுத்த ஆலா பனிஇஸ்றாயில்களுக்கு இறக்கிய மார்க்கத்தை மூஸாவைக்கொண்டு அத்திவாரமிட்டு ஈஸா மஸீகைக்கொண்டு முடிவாக்கினான். மூஸாவின் வேதத்துக்கு மூஸா அலைகிஸ்ஸலாம் முந்தின நபியாகவும் ஈஸா பிந்தின நபியாகவும் இருந்தார்கள். டியூற்றனமி 18, 18இல் சொல்லப்பட்டிருக்கிறபடி மூஸாவுக்கு அல்லாகுத்த ஆலா தெரிவித்திருந்தான் அவரைப்போல் இன்னுமொரு நபியை அவருடைய சகோதரர்களுக்குள்ளிருந்து எழுப்புகிறதாக. வாக்குசசொல்லப்பட்டபடி மூஸாவை யொத்த நபி முகம்மது சல்லல்லாகு அலைகிவசில்லம் அவர்களே யென்று அவர்களுக்கு அல்லாகுத்த ஆலா தெரிவித்தா

ன், மூஸாவுக்குப்பின் வருபவர்க
ளை யுண்டாக்கியதுபோல் முகம்
மது சல்லல்லாகு அலைஹிவசல்ல
ம் அவர்களுக்குப் பின்வருபவர்க
ளை யுண்டாககுகிறதாய் நாயன் வா
ர்த்தைப்பாடு செய்தான். இந்த
வார்த்தைப் பாட்டின்படி முகம்ம
து சல்லல்லாகு அலைஹிவசல்லம
அவர்களுக்குப்பின் வருபவர்களு
ள் கடைசியானவர் மூஸா அலைஹி
ஸ்ஸலாம் அவர்களுக்குப்பின் வ
ந்தவர்களுள் கடைசியானவரைப்
போலிருப்பது அவசியகம். அ
தாவது யூதர்களுககுள் வெளிப்ப
ட்ட மஸீஹைப்போல் முஸ்லிமக
ளுக்குள்ளும ஓர் மஸீகு வெளிப்
படவேண்டு மென்றதே. முஸ்லி
ம்களின் மஸீஹென்று வழக்காடு
கிற மிர்ஸா குலாம் அகமதுக்கு
ம் யூதர்களின் மஸீஹான ஈஸாவு
க்கும இடையிலுள்ள ஒப்புகளா
வன:— (1) ஓர் அரசரான மஸீ
கு வருவாரென்றும் அவர் யூதர்
களை அன்னிய ஆளுகையிலிருந்
து விடுதலையாக்கி ஓர் யூத விரா
ச்சியத்தை இஸ்தாபிப்பாரென்று
ம் யூதர்கள் நம்பி இருந்தார்கள்.
முஸ்லிம்களும் அப்படியே காபி
ரீங்களோடு யுத்தஞ்செய்து அ
வர்களைக் கொன்றுபோட்டு உல
கமுழுதிலும முஸ்லிம் இராச்சிய
த்தை இஸ்தாபிக்கிற வோர் மஸீ
கு வருவார் என்று நம்பி இருக்
கின்றார்கள். [2] யூதர்களின் நம்
பிக்கைக் கெதிராய் அவர்களுக்
குள் வெளிப்பட்ட மஸீகு சமா
தானமுள்ளவராய் இருந்தனர்.
அப்படியே முஸ்லிம்களுக்குள்
வெளிப்பட்ட மஸீகும் தமது
வார்த்தையை சமாதானத்தோடு
போதிக்கவும் இஸ்லாத்தின் மே
ன்மையை வாளைக் கொண்டு இ
ஸ்தாபிக்காது நியாயங்களையும் தி
ருஷ்டாந்தங்களையும் கொண்டு இ
ஸ்தாபிக்கற்கு வந்திருக்கின்றார்.
(3) யூதர்களின் மஸீஹ் வெளியா
னகாலத்தில் யூதர்கள் ஒன்றோ
டொன்று தர்க்கித்துக் கொள்ளு
மும பல கூட்டங்களாய்ப் பிரிந்தி
ருந்தார்கள். அப்படியே முஸ்லிம
மஸீகு வெளியாகிற காலத்தில்
முஸ்லிம்களும் பிரிந்திருக்கிறார்
கள். (4) பனிஇஸ்றாயில கோத்
திரத்திலுள்ள மஸீகு வெளியான
தேசத்தில பனிஇஸ்றாயில்கள் அ
ன்னிய விராசாவுக்குக கீழ்ப்பட்ட
வர்களாயிருந்தார்கள். அபபடியே
முஸ்லிம மஸீகுயே வெளிப்பட்ட
தேசததில் முஸ்லிம் ஆளுகை யற்
றுப்போய்விட்டது. [5] முஸ்லி
ம மஸீகு வெளிப்படடிருக்கிற
தேசத்திலுள்ள இங்கிலீஷ் ஆளு
கை பனிஇஸ்றாயில மஸீகு வெளி
பபட்ட தேசத்திலிருந்த ரோமன்
ஆளுகையை யொததிருக்கின்ற
து. [6] யூதர்கள் அவர்களின் ம
ஸீகு வெளிப்பட்டகாலத்தில் தே
வபகதியையும் நீதியையும் விட்டு
நீங்கி இருந்ததுபோலவே இப்
பொழுது முஸலிமகளின் தன்
மையும இருக்கின்றது. [7] யூதர்
கள் அவர்களின் மஸீஹைத்துன்
பப்படுத்தியதற்காய்ப் பிலேகை
க்கொண்டு ஆக்கினை செயயபப
ட்டார்கள். அபபடியே இத்தேச
ஜனங்களும் வார்த்தைப்பாடு செ
ய்யப்பட்ட மஸீஹைத் தள்ளிய
நிமித்தம் பிலேக்கு நோயைக்கொ
ண்டு ஆக்கினை செய்யப்படுகிறார்
கள். [8] யூதர்கள் தங்களின் ம
ஸீஹ வழக்கில் விசாரணை செ
ய்யப்படுவதையும் கொல்லப்படு
வதையும் விரும்பிக கொண்டது
போல் முஸ்லிம் மஸீஹின் எதி
ரிகளும் அவரை வழக்கிற் சிக்
கிக கொலைக் காளாக்குதற்கு நா
டினார்கள். மேலும் ஈஸாவுக்கெ
திராய்ச் சாட்சி சொல்ல யூதக் கு
ருமார்கள் கோட்டில் தோன
யினதுபோல் முஸ்லிம் மஸீகு

கொலை செய்யப்படுவதற்குப் பாத்திரனானவர் என்று சாட்சி சொல்ல மவுலவிமார்கள் தோன்றினார்கள். [9] ஈஸா பனீயிஸ்ராயில் நபிமார்களுள் கடைசியானவரும் மூஸாவுக்குப் பின்வந்தவர்களுள் கடைசியானவருமாயிருந்தாலும் அவருக்கு பனீயிஸ்ராயிலான தகப்பனிருக்க வில்லை யாதலின் அவர் பனீயிஸ்ராயில் வமிசத்தி லுள்ளவரல்ல. அப்படியே முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களுக்குப்பின் வந்தவர்களுள் கடைசியானவரென்றும் மஸீகு என்றும் உரிமை சொல்லுகிற மனிதன் குறைசி வமிசத்திலுள்ளவரல்ல.

ஈஸா அலைகிஸ்ஸலாம் மவுத்தாய்ப் போனார்களென்று அத்தாட்சிப் படுத்தியும், அவர்கள் மவுத்தாகவில்லையென்ற சொல்லை நிராகரித்தும், மிர்ஸா குலாம் அகுமது "இஸாலதுல் அவுஹாம்" என்ற நாமத்தோடு வோர் கித்தாபெழுதி இருக்கின்றார். அதில் தமது சொல்லுக்காதாரமாக குர்ஆனிலிருந்து முப்பது ஆயத்துகளைக்காட்டி இருக்கின்றாராம். அதிலொன்று ஐந்தாம் அதிகாரம் (சூறத்து) 117ம் வசனமே. அதில் அல்லாகுத்த ஆலா கியாமத்தில் ஈஸா அலைகிஸ்ஸலாத்தைப் பார்த்து நீர் உம்மைத் தெய்வமாய்க் கொள்ளும்படி உமது ஜனங்களுக்குச் சொன்னதுண்டா என்று கேட்கும்பொழுது அவர்கள் சொல்லும் மறுமொழியில் நான் அவர்களுக்கு நீ சொல்லாததைச் சொல்லவில்லை. நான் அவர்களுக்கிடையில் குடியிருந்த காலமெல்லாம் அவர்களுடைய செய்கைக்குச் சாட்சியாயிருந்தேன். ஆகிலும் நீ யென்னை மவுத்தாக்கிய பின்னர் நீயே அவர்களுக்குச் சாட்சியாயிருந்தாயென்று ஈஸா சொல்வார்களென்று கூறப்பட்டிருக்கிறது. மேற்படி வசனத்திலுள்ள "தவப்ப" (tawaffa) என்ற சொல்லுக்கு மவுத்தாக்குதல் என்ற பொருள் மாத்திரமே யுடையதாயிருக்க அதற்கு சரீரத்தோடு வானத்துக்கு எடுக்கப்பட்டது என்ற பொருளைக் கித்தாபுகளில் கொடுக்கப் பட்டிருக்கிறதென்றும் இந்தப்பொருளை மேற்படி சொல்லுக்கு அறபுக் கல்வியிலாவது, குர்ஆனிலாவது, ஹதீதுகளிலாவது கொடுக்கப்படவே யில்லை யென்றும் சொல்லப்படுகிறது. ஈஸாவின் மரணத்துக்குப் பிறகே அவரின் போதனையை விட்டும் நஸாறாக்கள் சறிகினார்களென்றும், தமது மரணத்துக்குப் பிறகு கிறீஸ்தவர்கள் செய்த காரியம் அல்லாவுக்குத் தெரியுமேயன்றி தமக்குத் தெரியாதென்றும் ஈஸா சொல்வதால் அவர் திரும்ப வுலகத்துக்கு வருவாரென்ற சொல் மறுக்கப்படுகிறதென்றும், அவர் இரண்டாமுறை உலகத்துக்கு வந்து நஸாறாக்கள் கொள்ளும் விசுவாசத்தை யறிந்துகொண்டால் மேலே காட்டப்பட்டவாறு அல்லாவுக்கு உத்தரஞ் சொல்லமாட்டரென்றும் மேற்படி ஆயத்து காட்டுகிறதாகச் சொல்லப்படுகிறது. அகுமதிய்யாக் கூட்டத்தார் ஈஸா அலைகிஸ்ஸலாம் மவுத்தாகிவிட்டார்களென்பதற் கத்தாட்சியாக ஹதீதுகளையும் காட்டுகிறார்கள். நபி சல்லல்லாகு அலைகிவஸல்லம் அவர்கள் மவுத்தாய்ப்போன நபிமார்களோடு ஈஸாவையும் கண்டிருக்கின்றார்கள். ஈஸாவுக்கு 120 வயதென்றும் ஹதீதிருக்கிறது. ஸிரினுகரில் அடங்கி இருக்கிற யூஸ் அஸாபுக்கும் 120 வயதென்று சொல்லப்படுகிறது. "மரியமுடைய மகனுக்கும் அவர் தாயு

க்கும் பத்திரமுள்ள ஜலவூற்றுகளுள்ள வுயர்ந்த வோர் தானத்தில் அடைக்கலம் கொடுத்தோம்” என்று குறுஆனில் 23வது சூறத்தில் 52வது வசனத்தில் சொல்லப்பட்டிருப்பதும் ஈஸா வேறு தேசத்தில் அடைக்கலம் புகுந்தார் என்றதற்கு ஆதாரமாய் எடுக்கப்படுகின்றது. மேற்படி வசனத்தில் வருகிற “அவா” என்ற சொல்லுக்குப் பெருமாபத்தான நேரத்தில் அடைக்கலம் கொடுத்தல் என்ற பொருளிருப்பதோடு ஈஸாவுக்கு சிலுவையிலறையப்பட்டதைத் தவிர வேறு பெருமாபத்துண்டானதாகச் சரித்திரத்தில் காணப்படவில்லையாம்.

அகுமதிய்யா கூட்டத்தை இஸ்தாபித்திருக்கிற மிர்ஸாகுலாம் அகுமது என்பவரே வார்த்தைப்பாடு செய்யப்பட்ட மஸீகு என்பதற்குக் கீழ்வரும் நியாயங்கள் சொல்லப் படுகின்றன:—

முதலாவது,— ஈஸா அலைகிஸ்ஸலாம் மவுத்தானார்களென்பதற்குள்ள அத்தாட்சி.

இரண்டாவது,— அகுமதிய்யாக் கூட்டத்தை யுண்டாக்கியவரான முஸ்லிம் மஸீகுக்கும் கிறிஸ்து மார்க்கத்தை யுண்டாக்கியவரான பனீயிஸ்றாயில் மஸீகுக்கும் இடையிலுள்ள ஒப்பும் மூஸா அலைகிஸ்ஸலாத்தின் மார்க்கத்துக்கும் முகம்மது சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களின் மார்க்கத்துக்கும் உள்ள பொருத்தமையுமே.

மூன்றாவது,—முதலாவது ஆதமுக்கும் இரண்டாவது ஆதமுக்குமுள்ள பொருத்தம், பிற்காலத்தில் வருகிறவராய் வார்த்தைப்பாடு செய்யப்பட்ட மஸீஹ் இரண்டாவது ஆதமென்று நபிமார்களால் அழைக்கப்பட்டிருக்கின்றார். முந்தின ஆதம் ஆறாவது நாளில் படைக்கப்பட்டவர். ஆண்டவனிடத்தில் ஒருநாளென்பது ஆயிரம் வருடம். ஆதலால் இரண்டாவது ஆதம் முதலாவது ஆதமுக்குப்பின் ஆறாயிரம் வருடக்கடைசியில் அல்லது ஏழாயிரம் வருட துவக்கத்தில் வெளியாக வேண்டும். இதுவே அந்தக்காலம்.

நாலாவது, — ஆதமுக்கு ஏழாயிரம் வருடத்துக்குப்பின் உலகத்தில ஆண்டவனின் இராச்சியமுண்டாகுமென்றும் அக்காலத்தின் துவக்கத்திலேயே வார்த்தைப்பாடு செய்யப்பட்ட மஸீகு வருவார் என்றும் நம்பப்பட்டிருப்பது.

ஐந்தாவது, —வார்த்தைப்பாடு செய்யப்பட்ட மஸீஹின் வரவைப்பற்றிய அடையாளங்கள் நிறைவேற்றப்பட்டன, கிறிஸ்தவர்களின் நம்பிக்கைப்படி சம்பவிக்கவேண்டிய கொள்ளை நோய்களும் பூமியதிர்ச்சிகளும் இக்காலத்திலேயே அதிகமாய்க் காணப்படுகின்றன. முஸ்லிம்களின் விசுவாசப்படி ஒரேமாதத்தில் சம்பவிக்க வேண்டிய சூரிய கிரகணமும் சந்திர கிரகணமும் 1894ம் ஆண்டில் றமளான் மாதத்தில் தீர்க்கதரிசனத்தில் சொல்லப்பட்ட திகதிகளில் சம்பவித்தன.

ஆறாவது.— வார்த்தைப்பாடு செய்யப்பட்ட மஸீஹ் ஹிஜறத்து பதினாலாம் நூற்றாண்டின் துவக்கத்தில் வருவார் என்று சென்றகாலத்திலிருந்த சில பரிசுத்தவான்கள் கூறியிருப்பது. அகுமதிய்யாக் கொள்கையை யமைத்தவரே வார்த்தைப்பாடு செய்யப்பட்ட மஸீஹென்று இக்காலத்திலுள்ள சில பரிசுத்தவான்கள் சொல்வது.

ஏழாவது:—வேதத்தில் மனிதர்களைச் சீர்திருத்துவோர் வருகிறது தேவையாயின் மனிதர்களின் இருதயங்களிலிருந்து ஈமான் (விசுவாசம்) மறைந்துபோகின்ற இக்காலத்திலேயே அவர் வருவது ஆவசியகம். அல்லாகுத்த ஆலாவின் தீர்க்கதரிசிகள் தேவையான காலங்களிலேயே அனுப்பப்பட்டிருக்கின்றார்கள். அல்லாகுத்த ஆலா மனிதனின் சரீரத்துக்குந் தேவையானதைக் கவனிப்பதுபோல் அவனின் ஆத்துமாவுக்குத் தேவையானதையும் கவனிக்கிறவனாயிருக்கின்றான்.

எட்டாவது:— தாமே மஸீகு என்று சொல்லுகிற மிர்ஸா குலாம் அகுமதின் தீர்க்கதரிசனங்கள் நிறைவேற்றப்படுவதும், அவருடைய துஆக்கள் அல்லாகுத்த ஆலாவால் ஏற்றுக்கொள்ளப்படுவதும், அவருடைய அறபுப் பாஷையின் அற்புதமான அலங்காரமும், அவரின் சிஷர்கள் அதிகப்படுவதும், அவர்களுக்கு அவரின் கொள்கை பலனைக்கொடுப்பதும், அவருக்கு அல்லாகுத்த ஆலா கொடுத்திருக்கிற உதவியும் பாதுகாப்பும், அவரின் சத்துருக்கள் அபஜயப்பட்டதும், அவர் கொண்டுவந்த விஷயம் ஜயமடைந்ததும், வேறு அடையாளங்களுமே.

வாசிப்பவர்களே,

நாம் துவக்கத்தில் சொன்னபடி மிர்ஸா குலாம் அகுமதின் அதிசயமான பேச்சுகளையும் காரியங்களையும் நீங்களறியும் பொருட்டு அவரின் இங்கிலீஷ் பத்திரிகையில் வருவனவற்றை மொழிபெயர்த்துத் தந்தோம். அவற்றைக் குறித்து எமது அபிப்பிராயத்தைத் தெரிவிக்குமுன் இத்தேச உலமாக்களின் கருத்தையறிய நாடுகின்றோம்.

## நவீன புதினங்கள்.

:o:

தும்பி முன்னே பறக்கிறது போல் இலகுவாய்ப் பின்னேயும் பறக்கக்கூடியதாம்.

---

புறுத்திக்கில் அரசர் நாளொன்றுக்கு நாற்பது சுருட்டுப் புகைக்கின்றாராம்.

---

ஸவுத்தண்டு துறைமுகத்திலுள்ள பாலத்தின் நீளம் ஒன்றேகால் மைலுக்கு மதிகம்.

---

ஸுவிற்ஸலண்டு தேசத்திலுள்ள ஆறு பெரும் பாடசாலைகளில் 2193 பெண்கள் படிக்கின்றார்கள்.

---

ஹேஸ்றின்ஸ் துறைமுகத்திலுள்ள வெளிச்சங்கள் கடலில் மூன்று மைலுக்கப்பால் காணப்படுகின்றன.

---

எங்கள் அரசர் அவர்களின் சமையற்காரனின் சம்பளம் வருடமொன்றுக்கு 2000 பவுன். அவன் நாளொன்றுக்கு இரண்டு மணித்தியாலமே வேலை செய்கின்றான்.

---

அமரிக்காவில் றேல்வே பிரயாணிகளுளொருவரை ஓர் றேல்வே கார்டு நிந்தித்ததற்காய் அப்பிரயாணி 150 பவுன் நஷ்டம் அறவு பண்ணினாராம்.

---

பெரிஸ் எல்லையிலுள்ள ஜுவிஸி என்றதலத்தில் கட்டப்படப் போகிற றேல்வே ஸ்டேஷனே உலகத்தில் ஆகப்பெரிய ஸ்டேஷனாய் அறியப்படுமாம்.

ஹோலண்டு தேச இராணி ஹேகு பட்டணத்திலுள்ள தமது மாளிகையில் ஒவ்வொருநாளும் கோயிலில் நடத்தப்படுகிற விதமான தேவாராதனை நடத்தி வருகின்றாராம்.

---

இற்றாலியில் அரசாட்சியாரால் நடத்தப்படுகிற லெத்தறையில் ஒரு வருடத்தில் 18 லட்சம் பவுன் வெகுமதிகளாய்க் கொடுக்கப்பட்டன. டிக்கட்டுகள் விற்கப்பட்டு 3,400,000 பவுன் சேர்ந்ததாம்.

---

இந்தவருடம் ஸ்பேன்தேசத்தில் ஒலிவ் எண்ணெய் குறைந்துவிட்டதால் இங்கிலாந்தில் அந்த எண்ணெயின் விலை யதிகப்படலாம்.

---

உலகத்திலுள்ள மருந்துச்சாப்புகளிலெல்லாம் ஆகப்பெரியது மொஸ்கோ பட்டணத்தில் இருக்கின்றது. அதில் 700பேர்கள் வேலைசெய்கிறார்கள். அந்த மருந்துச்சாப்பு இருநூறு வருடங்களுக்குமுன் ஸ்தாபிக்கப்பட்டது.

---

நடையின் தூரத்தை யளக்கின்ற கருவியைக்கொண்டு வோர் துரைசானி தாம் நாளொன்றுக்கு வழக்கமாய்த் தம் வீட்டு வேலைகளைச் செய்யும்பொழுது ஏழுமைல் நடக்கிறதாக கண்டிருக்கிறாள்.

---

பிறான்ஸில் பிரயாணிகளின் கிளப்பென்று வோர் சங்கமிருக்கிறது. அச்சங்கத்தார் பிறான்ஸிலுள்ள ஹோற்றல் காரர்களுள் மெத்தவும் நல்லொழுக்கமான சாமார்த்தியமுள்ள வொருவனைத் தேடுகிறார்களாம். அவன் காணப்பட்டபொழுது அவனுக்கு அச்சங்கத்தாரால் ஓர் கீர்த்தி முத்திரையும் 100 பவுனும் கொடுக்கப்படுமாம்.

---

டிறஸ்டன்பட்டணத்தில் நாய்கள் குளிப்பதற்கு வோர் பகிரங்கமான ஸ்நானத்தொட்டி ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதாம்.

---

ஆஸ்திறேலியாவில் சில பாகங்களில் குதிரை இலாடங்கள் இரும்பில் செய்யப்படாது தோலில் செய்யப்படுகின்றன.

---

பரிஸில் படங்கள் வைக்கப்படுகிற "லோவர்" என்னும் பகிரங்க ஸ்தானத்தில் ஒரு படத்தைச் சித்திரித்தவன் இறந்து 10 வருடங்களுக்குப்பின்னே அந்தப்படம் வைக்கப் படுகின்றதாம்.

---

பூகோளத்தின் சராசரியான சீதோஷ்ணநிலைமை ஐம்பது டிக்றி பஹ்றன்ஹீட்.

---

ஜப்பான்தேசத்தில் உஷ்ணகாலத்தில் சூரியன் காலை 4 மணிக்குதயமாகி மாலை 8 மணிக்கு அஸ்தமிக்கின்றது. குளிர் காலத்தில் சூரியன் காலை 8 மணிக்குதயமாகி மாலை 4 மணிக் கஸ்தமிக்கின்றது.

---

புறாக்களினதும் வான்கோழியினதும் இரத்தம் மனுஷ இரத்தத்தைப் பார்க்கிலும் பத்து டிக்றி மேலானதாம்.

---

தொழில் காலத்தில் பிலாக்பூல் என்னும் பட்டணத்துக்கு லன்

கஷயரிலிருந்து இரண்டு லட்சம வேலைக்காரர்கள் ஒவ்வொரு நாளும போகிறார்கள்.

---

ருஷிய சக்கிரவர்த்தி தாம் தனிமையாய்ப் புகைபடம் எடுக்கப்படுதற்குச் சம்மதமற்றவராம. ஆகிலும் மற்றவர்களோடு எடுக்கப்படுதற்குப் பிரியமுள்ளவராம.

---

ஜீவ வர்க்கங்கள் சமுத்திரத்தின் எந்த ஆழத்திலும் காணப்படுகின்றன. ஆகிலும் தாவர வர்க்கங்கள் வெளிச்சம் வேண்டியவைகள் ஆதலால பூமியின் பரப்புக்குக் கீழ் தூரத்தில் காணப்படுவதில்லை.

---

அல்பைன் மலையிலேறி நூடையூறுகளுக் காளானவர்களுள் ஜர்மனியரே அதிகப்பற்றானவர்கள். அம்மலையி லேறுகின்ற இங்கிலீஷ்காரர்கள் மெத்தக் கவன முடையவர்களாம்.

---

ருசியாவிலுள்ள ஒவ்வொரு குருவும கலியாணமுடிப்பது அவரின் கோயில் சட்டப்படி கடமையாம். ஆகிலும் மனைவி இறந்தால் அவர் சந்நியாசி மடத்திற் சேர்ந்து அங்கு தம் நாட்களைக் கழிக்க வேண்டுமாம.

---

குஷ்டரோகம் பிறித்தானிய தேசத்திலில்லை. ஆகிலும் நோர்வேதேசத்தில் அந்த ரோகமதிகம். அங்கு இருபது குஷ்டரோக ஆரோக்கிய சாலைகளிருக்கின்றனவாம.

---

தன்பிறிஜ் கிணறுகளின் ஜலம நோயாளர்களுக்கு ஒளஷதமாம.

1832ம் ஆண்டுவரையில் இங்கிலாந்திலுள்ள றை என்னும் சிறு பட்டணத்துக்கு பார்லிமேந்தில் இரு அங்கத்தவர்கள் நியமிக்கப்படடு வந்தார்கள்.

---

பணப்பைகள் செய்வதற்காய் இரண்டு லட்சம் தவளைத்தோல்கள் ஓர் தோக்கியோ வர்த்தகரால் ஒரு வருடத்தில் ஏற்றுமதி செய்யப்பட்டனவாம.

---

ஜப்பான் சக்ரவர்த்தி நாளொன்றுக்கு இருபது கவிகள் எழுதுகின்றார். பிறேன்ஸிய பிறிஸிடென்றும ஓர் புலவர்.

---

இக்காலத்தின வழக்கமான மையில் எழுதப்படுகிற எழுத்துகள் இன்னும் எழுபது வருடங்களில வாசிக்க வியலாதவைகளா யிருக்குமென்று இரசாயன சாஸ்திரிகள் கூறுகின்றார்கள்.

---

பூகம்பமே காரணமாய் பத்தொன்பதாம் நூற்றண்டில் பதினொறு தீவுகள் மறைந்தன. ஐம்பத்திரண்டு தீவுகள் புதிதாய் கடலிலிருந்து கிளம்பி இருக்கின்றன.

---

ஜமீக்காவிலுள்ள மின்மினிப் பூச்சுகள் அதிக வெளிச்சங்கொடுக்கிறவைகளாம். அவற்றில் ஆறை கவிழ்த்தப்பட்ட வீதிறுக்குள் வைத்தால் அவற்றின் வெளிசசத்தில் இலகுவாய் இரவில் வாசிக்கலாமாம்.

---

பைப் புகைப்பவரின் வாயிலிருந்து வெளியாகும் புகை வெண்மையானதும் பைப்பிலிருந்துவெளியாகும் புகை நீலநிறமுள்ளதுமாம். முந்தினதில கரியிருக்கிறது. பிந்தினது நீற்றப்பட்டது.

பேச்சிலும குணத்திலும் மெதுவானவளும் தன் எண்ணப்படி நடக்கத் தைரிய முள்ளவளும தன்னை யடக்கிக்கொள்ளும் திராணியுடையவளுமே துரைசானியென்று இற்றாலிதேச மார்கறட் இராணி கூறி யிருக்கின்றார்.

---

ஜர்மன் அரசாங்க றேல்வேயில் முதல் வகுப்பு வண்டிகளில் மஞ்சள் நிறமும், இரண்டாம் வகுப்பு வண்டிகளில பச்சை நிறமும், மூன்றாம் வகுபபு வண்டிகளில் வெள்ளை நிறமும் பூசப்பட்டிருக்கின்றன. இதனால் மனிதர்கள் இலகுவாய் வண்டிகளைத் தெரிந்து கொள்ளக் கூடியவர்களாயிருக்கிறார்களாம்.

உலகத்திலுள்ள இராணிகளிலெல்லாம சியம தேசத்து இராணியிடமே அதிக பெறுமதியுள்ள நகைகளிருக்கின்றன. வருடமொன்றுக்கு 1 லட்சம் பவுன் பெறுமதி யுள்ள நகைகள் செய்தற்கு பணித்தட்டானுக்கு நிலையானகட்டளை சியம் அரசரால் கொடுக்கப்பட் டிருக்கிறதாம்.

---

இக்காலத்தில் துருக்கிய பெண்கள் மேற்குதேச பெண்களைப்பார்க்கிலும் அதிகமான கல்வியுடையவர்களாம். மூன்று கிழக்குத் தேசபாஷைகளையும் நான்கு ஐரோப்பிய பாஷைகளையும் படித்துப் பல புத்தகங்களோடிருக்கிற துருக்கிய பெண்கள் அறிந்து கொள்ளாத காரியங்கள் மிகவும் சொற்பமாம்.